SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 17-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு வைகாசிமாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பாத்திமா ஆண்டவளே நமது நம்பிக்கை

### மரியாள் நமது நம்பிக்கை

இன்று மனுக்குலம் மிகுதியும் அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறது. கோடானுகோடிமக்களைப் பயமும், அவநம்பிக்கையும் பீடித்திருக்கிறது. அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்த சமாதானம் கிட்டாது தூரத்தில் மறைகிறது. உலகவிமோசனத்திற்குக் கடவுள் தெளிவாய் இரக்கத்தோடுகாட்டியுள்ள ஒரேவழி மரியாயே, அவளுடையமாசற்ற இருதயத்தின் பக்தியே, அவளுடைய விண்ணப்பங்களுக்கு மனிதர்செவிசாய்த்து ஒத்துழைப்பதே. தேவபராமரிப்பின் இயல்பின்படி, கடவுள் தமது இரக்கத்தின்வழிகளை வெளியிட உலகத்தில் மிகவுந்தாழ்ந்த, பலவீனமான சாதனங்களையே தெரிந்துகொண்டார். பாத்திமாவில் நமது பரிசுத்தநாயகி படிப்பற்ற மூன்று இடைப்பிள்ளைகளுக்குத்தோன்றி அவர்களிடம் சமாதானத்தின்செய்தியை வெளியிட்டாள். அன்றுமுதல் அச்செய்தி உலகின் எத்திசையிலும்பரவித் தத்தளித்துக்கொண்டிருந்த மக்களை ஆச்சரியத்திலும் நம்பிக்கையிலும் தட்டிஎழுப்புகிறது.

### பாத்திமாமாதா கேட்பது

நமது ஆண்டவள் நம்மிடம் கேட்பது ஒருசில சுலபமான விஷயங்களே: தபசு, விசேஷமாய் நமதுகிறீஸ்துவகடமைகளை நிறைவேற்றுவது. தினசரிசெபமாலை. அவளது மாசற்றஇருதயத்தின்மீது பக்தி. ஐந்து முதல் சனிக்கிழமைகளை அநுசரித்தல். இதில் என்னகடினம்? நமது பரிசுத்ததாய் ஒவ்வொருகாட்சியிலும் தபசின் அவசியத்தை வற்புறுத்தினாள். "விசுவாசிகள் தங்கள்சீவியத்தைச் சீர்திருத்தித் தங்கள்பாவங்களுக்காகமன்னிப்புக்கேட்க அவர்களைத் தூண்டுமாறு நான்வந்திருக்கிறேன். மனிதர்கள் தபசுசெய்யவேண்டும். அவர்கள்மனந்திரும்பினால் நமதாண்டவர் உலகத்தைமன்னிப்பார். அப்படி மனந்திரும்பாதேபோனால், தண்டனைதான் வரும்." தமதுபோதனையை வலியுறுத்த நமதுநாயகி தம்மைப் பார்க்கவும், கேட்கவும் பாக்கியம்பெற்ற அப்பிள்ளைகளுக்கு நரகத்தின் பயங்கரமானகாட்சியைக் காட்டினாள்.

### செபமாலை செபிப்பது

தபசு—செபம்: இதுவே நமதாண்டவளது விண்ணப்பத்தின் சாராம்சம்; "செபியுங்கள், மிகவும் செபியுங்கள், பாவிகளுக்காகத்தபசுசெய்யுங்கள்." அவள் விசேஷவிதமாய்க் கேட்கும் செபம்—செபமாலையை, அதன் இரகசியங்களைத் தியானித்துக்கொண்டுசெபிப்பது. அவள்பாத்திமாவிலேசெபமாலை இராக்கினியாகக் காட்சியளித்தாள்; லூர்து நகரில் தோன்றியதுபோல் இங்கும் எப்போதும் கையில்செபமாலையுடன் தோன்றி அதைச் சொல்லுமாறு அப்பிள்ளைகளுக்குக் கட்டளையிட்டாள். நமதாண்டவளின் விருப்பத்தைத்தழுவி ஒவ்வொருபத்துமணிக்குப் பின்னும் இதைச்சொல்லவேண்டும். —யேசுவே, எங்கள்பாவங்களைப் பொறுத்தருளும். யேசுவே, எங்களை நரகநெருப்பில்நின்று இரட்சித்தருளும். யேசுவே, சகல ஆத்துமங்களையும் விசேஷமாய் நீர் அதிகம் இரக்கங்காட்டவேண்

*************************
**மதுரை மேற்றிராணிஆண்டவரின் சுற்றுநிருபத்திலிருந்து**
*************************

டிய ஆத்துமங்களையும் பரலோக பாதையில்வழிநடத்தியருளும்.—கிறீஸ்துவநாடுகளில் வெகு பிரியமாய் வழங்கிவந்த குடும்ப செபமாலையை நமதாண்டவள் விரும்புகிறாள்.

### மாசற்ற இருதயப் பக்தி

இப்பக்தி அநேக அர்ச்சியசிஷ்டவர்களுக்குப் பிரியமானது. பாப்பரசர்களிடமிருந்து கணக்கற்ற உரிமைகளையும், பலன்களையும்பெற்றது. "மரியாயின் மாசற்றஇருதயத்தின் பெரியசபை" 1838-ம் ஆண்டு ஆரம்பமானதுமுதல் இப்பக்தி உலகெங்கும் விரைவாகப் பரவியுள்ளது. இச்சபையின் கருத்துகள் பாத்திமா ஆண்டவளின் விருப்பத்திற்கிசைந்ததே: (1)மரியாயின்மாசற்ற இருதயத்திற்குச் சிநேகம், பரிகாரம், மற்றவரைத்தூண்டுதல்முதலியமுயற்சிகளால் வணக்கம்செலுத்தல் (2) அம்மாசற்ற இருதயத்தின் வழியாகப் பாவிகளை மனந்திரும்பச்செய்தல்.

### சனிவாரப்பரிகார நன்மை

இவ்வழக்கம் புதிதல்ல. 1912-ம் ஆண்டு பாப்பரசர் தேவதாயின் பெயருக்கும் மகிமைக்கும்விரோதமான தூஷணங்களுக்குப் பரிகாரமாக மாதத்தின் முதல் சனிக்கிழமையிலே அப்பரிசுத்த தாய்க்குவணக்கமாகச் சிலபக்திமுயற்சிகளைச் செய்வோருக்கு, வழக்கமான நிபந்தனைகளுடன் பரிபூரணபலன் அளித்திருக்கிறார். பாத்திமா ஆண்டவள் தமது 'பெரிய வாக்குத்தத்த'த்தால் இம்முயற்சியை ஊர்சிதப்படுத்தியிருக்கிறாள். "எனக்குப் பரிகாரமாகத் தொடர்ந்துஐந்து முதல்சனிக்கிழமைகளில் பாவசங்கீர்த்தனம்செய்து நன்மைவாங்கி 53 மணிச் செபமாலை செய்து, செபமாலையின் தேவ இரகசியங்களைப்பற்றிக் கால் மணிநேரம் தியானிப்பவர்களுக்கு அவர்கள் தேவஇஷ்டப் பிரசாதத்தில் மரிக்கவேண்டிய சகலகிருபைகளையும் பெற்றுக் கொடுப்பதாய் வாக்களிக்கிறேன்." கால்மணிநேரத் தியானத்தை ஒவ்வொரு பத்துமணிக்குப்பின்பும் கொஞ்சமாகப் பிரித்துச்செய்யலாம். அல்லது தியானத்திற்குப்பதில் கால் மணிநேரம் செபமாலையின்தேவ இரகசியங்களைப்பற்றிய பிரசங்கத்தைக் கேட்கலாம். இவ்வாக்குத்தத்தத்திற்கும் ஒன்பது முதல்வெள்ளிக்கிழமை வாக்குத்தத்தங்களுக்குமுள்ள ஒற்றுமை எளிதில்விளங்கும். இதிலிருந்து நமது திவ்வியஇரட்சகர் இரட்சணியவேலையில் தமதுபரிசுத்த தாயையுஞ்சேர்த்து "உபஇரட்சகி" என்னும் அவள் பெருமையை ஊர்சிதப்படுத்துகிறார். தாயின்பக்தர்களுக்கு இதைவிடப் பிரீதியும், ஆறுதலும் உடையது உண்டோ?

### மாசற்றஇருதயத்தின் வெற்றி

பாத்திமாவின்செய்தி நமக்கு உற்சாகமூட்டுகிறது. நமது நெருக்கடியில், "மனுக்குலத்தின் ஆபத்தானவேளையில்" நமதுதாய் தமதுமாசற்றஇருதயத்தின்வெற்றியில் நம்மையும் நிச்சயமான வெற்றிக்குக் கூட்டிச்செல்ல வந்திருக்கிறாள். மனுக்குலம் பாத்திமாசெய்திக்குச்செவிசாய்த்தால், அது இரட்சிக்கப்படும். மரியாயே நமது நம்பிக்கை, நமதுசமாதானம், நமது அடைக்கலம். நாம்உண்மையாகவே சமாதானத்தை ஆசித்தால், நமது ஆண்டவளின் அழைப்புக்கிணங்குவோம். அவ்வாறு இணங்கினால், கம்யூனிஸம் பரவாது திடமான அணைபோடுவோம்; ஆத்துமங்களை நித்திய நிர்ப்பாக்கியத்தினின்று காப்பாற்றுவோம்; தண்டிக்களழும்பும் கடவுளின் கோபத்தைப் பரிகாரதபசினால் அமர்த்துவோம்; மரியாயின் மாசற்றஇருதயத்திற்கு ஆறுதல் அளிப்போம்; செபமாலை, பரிகாரநன்மைமுதலியமுயற்சிகளில் புதியஉற்சாகத்தை எழுப்புவோம். மேலும் இதற்குக் கைம்மாறின்றி நாம் போகமாட்டோம். நமது சீவியத்தைத்திருத்தி நமதுதினசரிவேலை, செப, துன்பங்களை இக்கருத்துகளுக்காகஒப்புக்கொடுத்தால் நம்மை அர்ச்சிப்போம். விலையில்லாப் பேறுபலன்களைச் சேகரிப்போம். நன்மாதிரிகையென்னும் மகாபலனுள்ள அப்போஸ்தலதுவத்தைக் கையாடுவோம். நன்மாதிரிகையே, போதனை பிரசங்கத்தைவிட நமதுவிசுவாசத்திற்கு ஆதாரமாவது; நமதுபரிசுத்த வேதத்தின் உண்மையையும், பலனையும் மற்றவர்கள் உணரச்செய்வது.

"பாத்திமாமாதாவும் செபமாலையும்"

பாத்திமா செபமாலை மாதா இலங்கையைத் தரிசிக்கப் போகும் இச்சந்தர்ப்பத்திலே "பாத்திமாமாதாவும், செபமாலையும்" எனும் இவ்வரியபுத்தகத்தைக் கத்தோலிக்க தமிழ்மக்கள் ஒவ்வொருவரும், ஒவ்வோர் குடும்பத்தினரும்வைத்திருந்து, மாதாவின்வருகைக்கு ஆயத்தஞ் செய்துவரவேண்டும். பாத்திமா அற்புதங்களின்வரலாறு, செபமாலைத்தியானங்கள், மாதாவின் வாக்குத்தத்தங்கள், ஐந்து முதற்சனிக்கிழமைப்பத்தி அனுசரிக்கும்விதம், மாதாவின் மாசில்லாத இருதயத்துக்கு நிந்தைப்பரிகார நவநாள் ஆகிய பலவும் இதிலேஅடங்கியுள்ளன. பார்வைக்கு அழகான புத்தகம்.

விலை பிரதி சதம் 25
தபாற்செலவு சதம் 10

பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T. A. J. மதுரநாயம்சுவாமியார்
மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்தில் இன்பம்

—✻—

## ஓர் ஆத்துமத்துக்கும் காவற்சம்மனசுக்குமிடையே சல்லாபம்

### அதிகாரம் I

(முன்தொடர்ச்சி)

**ஆத்துமம்:**— பிறரின் கோபகுரோதங்களினாலும், தந்திரோபாயம், அதிகார வல்லபத்தினாலும், மதிமோசம், பாராமுகத்தினாலும் எனக்கு நேரிடும் உபத்திரியங்களையும் தேவனே எனக்கு அனுப்புகிறாரோ?

**சம்மனசு:**— ஆம்; அவைகளையும் தேவனே அனுப்புகிறார். பிறராலே நீ படும்உபத்திரியங்களையெல்லாம் உனக்குஅனுப்பத் தேவன் நித்தியமாய் நிருபித்திருந்தார். அவர்நித்தியமாய் நிருபித்திருந்த உபத்திரியங்களை உனக்கு அனுப்பப் பிறருடைய கோபம்குரோதம் தந்திரோபாயம் முதலியவைகளைத் தேவன் உபகரணமாக அல்லது கருவியாக உதவிக்கொண்டார். தேவன் உனக்கு அனுப்பச் சித்தமாகாத ஒருஉபத்திரவத்தை உனக்குச் சத்துருக்களாயுள்ள யாராவது ஒருபோதும் வருவிக்க முடியவே முடியாது.

யூதர் பகைவைராக்கியம் பொறாமை புத்திக்குருட்டாட்டம் முதலியவைகளினாலே யேசுக்கிறீஸ்துநாதரைப் பிடித்துப் படாதபாடெல்லாம் படுத்திச் சிலுவையில்அறைந்து வதைத்தார்கள் அல்லவோ? யூதர் தமக்குவருவித்த அப்பாடு, மரணமெல்லாம் தமது நித்தியபிதாவானவர்தாமே தமக்குஅனுப்பியதாகமதித்து முழுச்சிரவணத்தோடும் கையேற்று அனுபவித்தருளினார். அதினாலல்லவோ தாம்யூதராற் பிடிபடுகிறசமயத்தில் அவர்களின்கையில் நின்று அவரைமீட்கப் பிரயாசைப்பட்ட இராயப்பரைநோக்கி: "யூதர் எனக்குக்கொடுத்த பாத்திரத்தை" என்று திருவாய்மலராது "பிதாவானவர் எனக்குக்கொடுத்த பாத்திரத்தை நான்உட்கொள்ளாமல் இருப்பேனோ" என்று திருவாய்மலர்ந்து அவரைச் சும்மாவிருக்கும்படி செய்தருளினார்,

**ஆத்துமம்:**—என் சம்மனசானவவே! அர்ச். இராயப்பர் சொல்வதுபோலப் பிசாசானது யாரைவிழுங்கலாமென்று கர்ச்சிக்கிறசிங்கம்போல உலகம்எங்கும் சுற்றித்திரிகின்றதே. அந்தக்கொடிய பிசாசின் சற்பனையினாலே மனுஷருக்குவருகிற வியாதி, பாவச்சோதனை, நஷ்டங்களையும் தேவன் தாமே அனுப்புகிறாரோ?

**சம்மனசு:**— என்பிரிய ஆத்துமமே! பிசாசு மனுஷரிலும் மகாவல்லபமும், மதிச்சூட்சியும் உள்ளதாயிருந்தாலும், மனுஷரைக்கெடுக்க எந்நேரமும்தீராத வாஞ்சையுள்ளதாய்இருந்தாலும், தேவனிலே வணக்கவைராக்கிய முள்ளதாய் இருந்தாலும் அவருடையசித்தமின்றி-அவருடைய அனுமதியின்றி ஒரேஒரு சின்னஞ்சிறிய தின்மையையாவது, ஒரேஒருமுறைமுதலாய் அதனால் செய்ய முடியவே முடியாது.

ஆகையால் தேவன்விடைகொடாதுவிடில் மாயவித்தைக்காரர் எத்தனைபேர் ஒன்றுகூடினாலும் அவர்களால் அழைக்கப்பட்ட பிசாசுகள் எத்தனைதான் ஒருங்குசேர்ந்தாலும் ஒருநஷ்டமாவது, ஒருபாவச்சோதனையாவது ஒரு நோயாவது, வேறெவ்வித தின்மையாவது உனக்குவருவிக்க இயலாது என்று எப்போதும் உறுதியாக நிச்சயித்துக்கொள். பிசாசினாலே பாவதந்திரம், சேதபாதம், துன்பதுயரம் உனக்குநேரிட்டால் அவைகள் தேவ விடையினாற்தான் நேரிடும். தேவ விடையினால் உனக்குவருவது தேவ சித்தத்தினால் உனக்குவருவதே, ஆதாவது தேவன்தாமே உனக்கு வரவிடுவதாமே.

# பாஸ்குத் திருநாளுக்குப்பின் 4-ம் ஞாயிறு

## சுவிசேஷ வாசிப்பு

(அரு. 16: 5—14)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத்திருவுளம்பற்றினதாவது: இப்போது என்னை அனுப்பினவரிடத்திற்குப்போகிறேன். ஆயினும்எங்கே போகிறீரென்று உங்களில்ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனால், நான் இவைகளை உங்களுக்குவசனித்ததினால் துக்கம் உங்கள் இருதயத்தைநிரப்பிற்று. ஆயினும், நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான்போகிறதே உங்களுக்கு நலமாயிருக்கின்றது. ஏனெனில், நான் போகாதிருப்பேனாகில் தேற்றுகிறவர் உங்களிடத்தில் எழுந்தருளிவரார்; ஆனால், நான் போவேனேயாகில், அவரைஉங்களிடம் அனுப்புவேன். மேலும் அவர் வந்தபிறகு பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் அவர்உலகத்தைக் கண்டித்துப் பேசுவார். பாவத்தைக்குறித்து என்றேன்; ஏனெனில், அவர்கள் என்பேரில் விசுவாசம்வைக்கவில்லை. நீதியைக்குறித்து என்றேன்; ஏனெனில், நான்பிதாவினிடத்தில் போகிறேன். இனி என்னைக் காணமாட்டீர்கள். தீர்வையைக்குறித்து என்றேன்; ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதி ஏற்கனவே தீர்வையிடப்பட்டான். உங்களுக்குச்சொல்ல இன்னும் அநேககாரியங்கள் உண்டு. ஆனால் இப்பொழுதோ அவைகளைத்தாங்க உங்களாற்கூடாது. ஆனால் சத்தியத்தின் இஸ்பிரீத்துசாந்துவானவர் வரும்போது எல்லாச்சத்தியத்தையும் உங்களுக்குப் போதிப்பார். ஏனெனில், அவர் தாமாகப்பேசுவதில்லை, ஆனால் தாம் கேட்கும்யாவையுஞ் சொல்லுவார். வருங்காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னை மகிமைப்படுத்துவார். ஏனெனில், என்னுடையதினின்று பெற்றுக்கொண்டு அதை உங்களுக்கு அறிவிப்பார் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

**ஆத்துமம்:**—என்பிரிய காவற்தூதனே! தேவவிடையின்றிப் பிறராலாவது பிசாசினாலாவது எனக்குஏதும் வியாதி நோவு சாவுமுதலிய தின்மைகள்வாராவிட்டாலும், தற்செயலாய், தலைவிதிப்பிரகாரமாய் எனக்குஅவைகள் நேரிடமாட்டாவா?

**சம்மனசு:**—என் அருமையான ஆத்துமாமே! தற்செயல், தலைவிதிஉண்டென்று உலகத்திலே கற்றவர்களும், கல்லாதவர்களுமானபலர் நம்பிநடந்துவந்தாலும் அவைஇரண்டும் இல்லையே இல்லையென்று உனக்குச் சத்தியவாக்காக அறிவிக்கிறேன். ஆகையினாலே தலைவிதியால் ஒன்றுமே பூலோகத்தில் நடைபெறுவதில்லையென்றும், தற்செயலாய் நடக்கிறவைகளென்று மனுஷர் நம்பிப் பேசிக்கொள்ளுகிறவைகளெல்லாம் தேவதிருவுளத்தால் மாத்திரம் நடக்கிறவைகளேயென்றும் திடமாய்த் தீர்மானித்துக்கொள்வாயாக!

(தொடரும்)

# மாதன் அஞ்சல் ஓட்டம்

[மாதன் அஞ்சலோட்டக் கவிதைப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குச் சென்றவியாழக்கிழமை பிரதமமந்திரி காரியாலயத்தில் பிரதமர் டி. எஸ் சேனநாயக அவர்கள் ரொக்கப்பரிசுகள் வழங்கினார். நெடுந்தீவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், கரவெட்டித் திருவிருதய தமிழ்ச்சிரேஷ்ட பாடசாலைத் தலைமையாசிரியருமான திரு. க. த. ஞானப்பிரகாசம் அவர்களுக்குத் தமிழ்க்கவிதைக்குரிய இரண்டாம்பரிசு ரூபா 500 அளிக்கப்பட்டது. அச்சமயம் அவர் தாம் எழுதியுள்ள பரிசுபெற்ற "மாதன்ஓட்டத்"திலிருந்து மேல்வரும் கவிதைகளைப் படித்தார்.]

### காப்பு: வெண்பா

தெய்வப் பதியிலங்கைத் தேவி விடுதலையின்
உய்வைச் சுகித்தே யுவந்துடன்—செய்தநன்னாள்
ஒங்கும் "மாதனஞ்ச லோட்ட"மதின் மாண்புரைக்கத்
தாங்கும் பரன்றாள் சரண

### விருத்தம்

அயன்படைத்த படைப்பினிலே நயன்படைத்த
படைப்பெல்லாம் அமையத்தீட்டி
மயன்படைத்த "சுதன்மை"யெனும் மண்டபமோ
மாமேரோ "ஒலிம்பிக்" குன்றோ
பயன்படைத்த பருதியுமே தன்னொளியைப்
பறிகொடுத்துப் பதறுமென்றால்
வியன்படைத்த சுதந்தரமா மண்டபத்தின்
மேன்மைதனை விளம்பலாமோ

* * * *

பார்கொண்ட புகழெலாம் படைத்தொளிரும்
"ரொறிங்ரன்"மா சதுக்கத நந்நாள்
சீர்கொண்ட சிங்கவே றெனுந்தீரன்
அரசியலின் தீர்க்கஞானி
ஏர்கொண்ட "சேனநா யக"வள்ளல்
எழுந்தருளி யிருந்ததேசு
"ஊர்கொண்ட திங்கள்"தனுக் கொப்பிடினும்
மீக்கெனவே யுரைக்கலாமே

### வேறு

சிங்கம்வரிகள் கரிகள்கரிகள் தீங்குசெய்யா நீங்கிடும்
துங்கமானும் புலியுஞ்சேர்ந்தோர் துறையில்நீரை வாங்கிடும்
கங்குல்பகலாய்ச் சிறகடித்துக் கானச்சேவல் கூவிடும்
எங்கும்நற்சா தாரியோசை யெழுந்தவானைத் தாவிடும்

கொன்றைக் குழல்கொண் டூதுமோசை குரவையோசை கோவலர்
சென்றுமந்தை புரப்புமோசை தேரும்ஆய மாதர்கள்
மன்றில்நாளுந் தயிர்கடையும் மத்தினோசை வானையுந்
துன்றித்தாக்க மாதர்கேட்டுத் துரிதமாக வோடினர்

---

சனசமூகநிலைய வாசிகசாலைத்

## திறப்புவிழா

16-4-50 பிற்பகல் 5-30 மணியளவில் நெடுந்தீவு நடுக்குறிச்சி அர்ச். யுவானியார்ஆலயமுன்றிலில் நவமாய் அமைந்தவோர் அழகியமண்டபத்தில் நெடுந்தீவுநடுக்குறிச்சிச் சமூகசேவா சங்கத்தாரால் நெடுந்தீவு அர்ச். சூசைமாமுனிவர் வாலிபஐக்கியசங்க ஆதரவின்கீழ் ஓர் வாசிகசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவ்வமையம் ஆண்களும் பெண்களுமாகப் பெருந்திரளானோர் சமூகமளித்திருந்தனர். நெடுந்தீவுக் கட்டளைக்குருவாரும், சனசமூகநிலையத் தலைவருமான வண. எல். டெசிசுவாமியவர்கள் அக்கிராசனம்வகித்தனர். நெடுந்தீவுக் கிராமச்சங்கத் தலைவர் திரு. வி. எஸ். ஜேம்ஸ்அவர்களும், மற்றும்பலசங்கங்களின் தலைவர்கள், ஆசிரியர்கள் முதலியோரும் சமூகமளித்திருந்தனர். நெடுந்தீவுக்கிறீஸ்தவர்களின், முக்கியமாய் நெடுந்தீவு மத்தியபூமிமக்களின் சமய, சமூக, ஆத்மீக, கலாச்சார அறிவுவிருத்திக்கு இந்தவாசிகசாலை எத்துணை அவசியம் என்பதுபற்றி வண. குருப்பிரசாதியவர்களால் தலைமைப்பேருரையில் கூறப்பட்டது. கிராமச்சங்கத்தலைவரால் சனசமூகநிலையத்தையும், அதன் சேவைகளைப்பற்றியும் சிறப்பாகப் பேசப்பட்டது. தொடர்ந்து திரு. சு. அந்தோனிப்பிள்ளையவர்களும்பேசினர். பல ஆதரவாளர்களின் சந்தோஷ ஆர்ப்பரிப்புகட்கும், கரகோஷங்களுக்கு மிடையில் புதியவாசிகசாலை வண. குருப்பிரசாதியவர்களால் பொதுசனங்களின் உபயோகத்துக்காகத் திறந்து வைக்கப்படலாயிற்று. ஈற்றில் திரு. ஜி. அந்தோனிப்பிள்ளை ஆசிரியரின் வந்தனோபசாரத்துடன் விழா இனிது முற்றுப்பெற்றது. —நிருபர்

---

—எந்தப்பெரியசெல்வனும் ஒரேமுறையில் 40 பேருக்குமேல் விருந்தளிக்கப்படாதென்பது இந்திய அரசின் பிரமாணம். இதைமீறிச் செக்குந்தராபாத்திலே செல்வர்ஒருவர் சமீபத்திலே ஐஞ்ஞூறு பேருக்குமேல் விருந்திடத் தயாராயிருந்தபோது பொலிசர் அவரதுவீட்டுள் புகுந்து சமையல்செய்திருந்த சாப்பாடுமுழுவதையும் பறிமுதலாக்கி அப்பட்டினத்திலுள்ள ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுத்தார்களாம்.

—நியூசிலாந்திலே கிவிஎன்ற இனக்கோழி இருக்கின்றது. இதுமுட்டையிட்டால் பிறகு அதைக் கவனிப்பதுமில்லை, அடைகாத்துக் குஞ்சுபொரிப்பதுமில்லை. அதனால் அதன்சேவலே அடைகிடந்து குஞ்சு பொரிக்கின்றது. சமீபத்திலே இந்தச்சேவல் 185 நாள் அடைகாத்து ஐந்து குஞ்சுகளைப் பொரிக்கலாயிற்று.

— 23 வயசுடையவரான சியதேச பூம்பிபோன் அதுல்தெத் மன்னருக்கும், லண்டனிலுள்ள சியதேச ஸ்தானிகரின் 17 வயசுடைய சிர்கித் தியாகர இளவரசிக்கும் சென்ற 28-ந் திகதி பாங்கொக்நகரிலே திருமணம் நிறைவேறியது. அதற்குப் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை. பிரதிமைப்படங்கள் பிடிப்பதற்கும் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான்கேட்டபடி பரிசுத்த திருக்குடும்பத்தின் உதவியாலும், நான் நினைத்த அர்ச்சியசிஷ்டர்களின்மன்றாட்டத்தாலும் நான்கேட்ட மன்றாட்டம் கிடைத்ததினால் நன்றிஅறிதலாக இதைப் பிரசுரப்படுத்துகிறேன்.

யாழ்ப்பாணம் M. D.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் நீதிமான்

(பண்டிதை : சிஸ்றர் மேரி எமறென்ஸியா அவர்கள்)

(முன்தொடர்ச்சி)

அறநெறியில் துறைபோய்ச் சுத்தவாளராக இன்றுவான் வீட்டில்விளங்கும் முக்தர்களெல்லாம் புண்ணியவான்கள் என்று மட்டும் பாராட்டப்பட, இவர் ஒருவரைமட்டும் வேதநூல் நீதிமானெனப் பாராட்டுவதின் தாற்பரியமென்ன? ஏனையோரிடம் குறிப்பிட்ட சில அறம் விளங்கித்துலங்கியது. இவரிடமோ அறமெல்லாம் மலிந்துகிடந்தன. ஏனைய புண்ணியவான்கள் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட சிலபுண்ணியங்களால் புகழுக்குரியவராகின்றனர். புனிதன்சூசையிடம் பொலிந்த புண்ணியங்கள் எவையென்று வினவுவோருக்கு அவரிடம் துலங்காத புண்ணியம்தான் எது? என்ற மறுவினாவே சரியான உத்தரமளிக்கும்.

தேம்பாவணியென்னும் காவியஉலகில் இவரைக்கனப்படுத்துகின்ற கவிவீரமாமுனிவர் தம்நூலின் பாலமாட்சிப் படலத்தில்கூறும் ஒருபாடல் சிறுப்பங்தொட்டே இவரிடத்தில் அறம் மலிந்துகிடந்த தன்மையை நன்குவிளக்கும்.

"நிழலில் மேதிகள் நீரில் சங்குகள்
பொழிலில் தோகைகள் பூவில் வண்டுகள்
கழனி ஓதிமம் துயிலக் கண்டுவாழ்
குழவி வாய்நலம் துயில்கொள் வாமரோ"

நிழலிடத்தில் எருமைகளும், தண்ணீரிடத்தில் சங்குகளும், சோலைகளிடத்தில் மயில்களும், மலரிடத்தில் வண்டுகளும், வயலிடத்தில் அன்னங்களும் இனிதாய்த் தூங்குவதுகண்டு சூசை என்னும்பாலனிடத்தில் நன்மையெல்லாம் தூங்கும்என்கிறார். இவரிடம் விளங்கிய புண்ணியவளத்தைப்பற்றியே வளவன் என்ற சிறப்புப்பெயரையும் இவர்க்கு வழங்கியுள்ளார்.

தன்தாயின்கர்ப்பத்தில் தூய்மைப்பட்ட சூசையின் ஆத்துமபுனிதம் என்றும்கறைபட்டிலது. பாவத்தைவெறுத்த உள்ளத்தினராய் உலக பாவமாய்கைக் குத்தப்ப இளம்பிராயத்திலேயே நகரைத்துறந்து கானகத்தில் தவவாழ்க்கையை மேற்கொள்ளச்சென்றார். ஆண்டு இறைவனது ஆணையால் தடுக்கப்பட்டு மீண்டும் நகரையடைந்து கன்னிமரியம்மாளுக்கு வாழ்க்கைத்துணைவனாகத்தெய்வநியமிப்பால் இணைக்கப்பட்டார். முப்பது ஆண்டுகள் அவ்வம்மையுடன் வாழ்ந்தார்.

பெண்ணோடுவாழ்ந்தார். எனினும் பெண்மோகம் அவரைப் பற்றவில்லை. சூசைமுனிவரும், கன்னிமரிஅம்மாளும் ஐங்கதவாகிய ஐம்பொறிகளை அடைத்து நல்லறங்களை அவற்றுக்குக் காவல்வைத்து இல்லறவாழ்க்கையிலேயே துறவறத்தை இணைத்து என்றும், எங்கும், எவரும் செய்தறியாதவகையில் அதனைப்பேரறமாக்கினர். இப்படி ஈரறம்பொலிந்துவிளங்கிய பேரறநிலையத்தையே தனக்கு உகந்த பிறப்பிடமாகத்தெரிந்துகொண்டார் தேவகுமாரனாகிய யேசுக்கிறீஸ்து. கன்னியும்தாயுமான அமல மரியிடமாய் ஆண்டவன் அற்புத பிறப்பாய் அவனியில்தோன்றி விரதன்சூசையுடையவும், கன்னிமரியுடையவும் மைந்தனாக வளர்ந்தார்.

வளவன்சூசை அவரைவளர்க்கும் கைத்தாதையானார். மகவாசைகாட்டி, மைந்தனைச் சீராட்டி, பாராட்டி, உணவூட்டி, உறக்காட்டி வளர்த்தார். தேவாதிதேவனை மார்புறத் தழுவினார், மடிமீது கிடத்தினார், மழலைமொழிகேட்டு மகிழ்ந்தார். தேவகுமாரன் அவரை அப்பாவென அழைத்தார். அருமைகாட்டினார். அவரின் ஆதரவும் பெற்றார்.

இன்று பார்புரக்கும் பாத்திமா இராக்கினியென்று அவ்வாண்டவளின் ஒரு சாயல்சுரூபத்தைத் தரிசிப்பதும், வணங்குவதும் தங்கள் பெரும்பேறு என்று அகிலலோக மக்களும் ஆர்ப்பரித்து ஆனந்திக்கின்றனர். ஆனால் அந்தப் பார்புகழும் பரமேஸ்வரியின் சகவாசத்தில் முப்பது ஆண்டுகள் உடனுறையும் பேறுபெற்றார் புனிதன்சூசை. அவளோடு உண்டார், உரையாடினார், செபித்தார், அவள் தம்ஏவல் செய்யும் பேறும்பெற்றார்.

சூசைக்குக்கிடைத்த இப்பாக்கியம் மோட்சத்தில்வாழும் எந்த முக்தர்களுக்குக் கிடைத்தது? இத்தகைய பெறுதற்கரிய பேற்றைக் கொண்டிருந்தும் மணலுள்மறைந்த மாணிக்கம் போன்று மறைந்தவாழ்க்கையில் யேசு, மரியுடன் இணைந்து வாழ்ந்து, அவர்களைப் பேணிப்புரப்பதே இவ்வுலகில் தமது ஏக இலட்சியமென்பதாக வாழ்ந்தார். இறுதியில் யேசுபெருமானின் மடிமீது தலைசாய்த்து அன்னைமரியின் அரவணைப்பில் தமது இறுதிமூச்சை விட்டார். இன்று மோட்சானந்த மகிமையில் பரலோகபூலோக அரசியாம் அன்னைமரிக்கு அடுத்தபடியாக அவளின் இணையற்ற காவலனாகவும், முக்தர்களில் முதல்வனாகவும், வேதம்புகழும் நீதிமானாகவும் முப்புகழும்தாங்கி விளங்குகின்றார்.

இத்தகைய பேரும் புகழும் வாய்ந்த புனிதன்சூசையின் அன்பையும், ஆதரவையும் தேடுகின்றவர்க்கு அவர் எப்பேர்ப்பட்ட உபகாரியாயிருப்பாரென்று சொல்லவும்வேண்டுமா? அவருடைய சலுகையைப் பெற்றவர்களே இதற்குச் சாட்சி பகர்கின்றனர். கார்மேல் தவக்கன்னிகை தெரேசாள் இவரைத் தனது உத்தம உபகாரிஎன உலகுக்கு அறிமுகப்படுத்துகின்றாள். இம்மகான் தனக்குச் செய்துள்ள சொல்லரிய நன்மைகளை வியந்து போற்றுகின்றாள் அப்புனிதகன்னிகை. எனவே, அன்பன்சூசையை நாடுவோம்! நாளும் அவர் ஆதரவைத் தேடுவோம்! புண்ணியன் அவர் பாதத்தில் கூடுவோம்! நீதிமான் நீரே எனப்பாடுவோம்!

(ந. ஆ.)

கொழும்புத்துறையிலே
கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும்
சஞ் சூசைமாதவன்பேரில்

# தோத்திரப்பா

1

மன்னவன்தவிது கோத்திரவிளக்கே!
மரியையின் பிரியபத்தாவே!
பொன்னுலகேந்து மன்னவன்றன்னைப்
பூங்கரத் தேந்தியபுனிதா!
இந்நிலந்தனிலே யான்படும்பாடு
எண்ணிடற் கரிதுநீபாராய்!
துன்னியகொழும்புத் துறையெழுமரசே!
சோதியே! சூசைமாமுனியே!

2

பெருந்துயர்க்கடலி லமிழ்ந்திடாநீந்திப்
பேரின்ப கரையினைச்சேர்க்கப்
பொருந்தியதெப்ப மாகவுன்உபய
பொலன்கழல் பிடித்தனன்நம்பி
அருந்துணையாக ஆபத்துவேளை
அஞ்சலென் றடைக்கலமருள்வாய்
வரந்திகழ்கொழும்புத் துறையெழுமரசே!
மாதவா! சூசைமாமுனியே!

3

பாடியுன்சீரைப் பயனடையாது
பாரில்நாட் போக்கினேன்பாவி
நாடியேமண்பொன் மாய்கையிலுழன்று
ஞானமே துறந்தனன்கண்கள்
மூடியேமரண மாகிடும்வேளை
முன்னின்று காத்திடவாராய்
தேடியேகொழும்புத் துறையெழுமரசே!
செல்வமே சூசைமாமுனியே!

4

தந்தைதாய்தாரம் தமர்பரிவாரம்
சாவினைத் தடுத்திடுவாரோ
சந்தையிற்கூட்ட மென்பதையுணர்ந்தே
தாமரைச் சேவடிபணிந்தேன்
அந்திமவேளை வந்தெனைக்காராய்
ஆனந்த பாக்கியநதாராய்
எந்தையே! கொழும்புத் துறையெழுமரசே!
ஏதமில் சூசைமா முனியே!

5

நிலையிலாவிளமை யாக்கைசெல்வத்தை
நீரினிற் குமிழியென்றெண்ணு
விலைமதிக்கரிய வாத்துமந்தன்னை
விற்றனன்பி சாசுக்குவீடாய்
மலையுறுவிளக்கே! மாதவக்கொழுந்தே!
மதுமலர்க் கொடியுறுவரதா!
கலைநிறைகொழும்புத் துறையெழுமரசே!
கருணைசேர் சூசைமாமுனியே!

## அர்ச். அந்தோனியார் கோவில்
## பெரியகட்டு

——:——

பெரியகட்டு, அர்ச். அந்தோனியார் கோவில் வடஇலங்கை முழுவதிலும் பிரஸ்தாபமாக நன்கு அறியப்பட்டுள்ளது. தற்சமயம் இது அழிந்து பாழாகும் நிலைமையில் இருப்பதாலே, புதிய கோவில்ஒன்றைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. வருடந்தோறும் யாத்திரிகர்கள் அதிகரித்துக்கொண்டு வரும் இப்பதியிலே கொண்டாடப்பட்டுவரும் திருநாளின் இருபத்தைந்தாம் ஆண்டு யூபிலிவிழா இவ்வருடம் ஆவணிமாதம் வருகின்றது. அதனால் அர்ச். அந்தோனியாருக்கு மகிமையாக உசிதமான ஓர்சிறந்தகோவிலைக் கட்டியெழுப்ப எமக்கு உதவி செய்யுமாறு அர்ச். அந்தோனியாரின் பக்தர்களுக்கு மனுப்பண்ணுகின்றோம். பழையகோவில் யாத்திரிகர்களுக்கு ஓர் தங்குமடமாய் இருந்துவரும்.

**S. P. Alfred** ✠ **J. A. Guyomar O. M. I.**
Parish Priest, Vavuniya. 14-2-50 Bishop of Jaffna.

### நேர்த்தியின் பூர்த்தி

செபமாலை பாத்திமா மாதாவிடம் நான் கேட்டமன்றாட்டம் அனுகூலமானதிற்கும், பாத்திமா மாதாவின் அருள் எங்கும் அறியப்படும்படியாயும் பாதுகாவலனில் பிரசுரம்செய்கிறேன்.

Venkalai A. S. A. MORAIS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருநாள் அட்டவணை

வைகாசிமாதம் 1950


| | | |
|---|---|---|
| வெ | 5 | அர்ச். 5-ம் பத்திநாதர், பா. |
| சனி | 6 | அர்ச். அருளப்பர், அ. |
| ஞா | 7 | கர்த்தர் உத்தானத்தின் பின் வரும் 4-ம் ஞாயிறு — அர்ச். ஸ்தனிஸ்லாஸ், மே. வே. |
| திங் | 8 | அதிதூதரான அர்ச். மிக்கேல் தரிசனையான திருநாள் [மே. |
| செவ் | 9 | அர்ச். கிறகோரி நசியஞ்சேனூர், |
| புத | 10 | அர்ச். அந்தோனீனு, மே. |
| வியா | 11 | அர்ச். இரக்கத்தின் தாய் |

சத்தியவேத

# பாதுகாவலன்

1950-ம் ஆண்டு

வைகாசிமாதம் 4-ந் திகதி




சருவேசுரனுடையகிருபையினாலும், பரிசுத்தஸ்தானத்தின் தயவினாலும் யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய

ஜோண் அல்பிறேட் கியோமார் ஆண்டவராகிய நாம்

நமது மேற்றிராசனத்திலடங்கிய சகல குருமாருக்கும், விசுவாசிகளுக்கும் கர்த்தரிலே சுகமும், ஆசீர்வாதமும் விரும்பி "யாத்திரைக்கன்னிகை" பாத்திமாநாயகியின் வருகையைப்பற்றி விடுக்கின்ற

## மேய்ப்பர் நிருபம்

அருமையான வண. குருப்பிரசாதிகளே! அன்பார்ந்த சகோதரர்களே!

சென்மபாவதோஷத்தாலே மனுக்குலத்தவர்கள் கெட்டழிந்து பாவநாட்டமுடையவர்களாய்ச் சீவிக்கின்றார்கள். மனிதர் பரிசுத்தராய்ச் சீவிப்பதற்கு அவசியமான வழிவகைகளை நமது திவ்வியகர்த்தராகிய யேசுக்கிறீஸ்துநாதர் தமது திருச்சபையில் ஏற்படுத்தியுள்ளார். பாவவினையாலே மனுமக்கள்தலைமேல் விழவிருந்த தேவநீதிக் கோபாக்கினிக்கு அவர்கள் உள்ளாகாதபடியும், பாவவழியை விட்டுவிலகி அவர்கள் புண்ணியநெறியில் நிலைநின்று மோட்சமுடியை அடையும்படியும் காலத்துக்குக்காலம் அவர்களை எச்சரித்துக் கொண்டுவந்தார். தமது திருத்தாயார் நமக்காகப்பரிந்துபேசித் தம்முடைய கிருபையையும், பொறுதியையும் நமக்குப் பெற்றுத்தரும்படியாய் நமது காலத்திலேயே பலசமயங்களில் அவரை நம்மிடம் அனுப்பிவைக்கவில்லையா?

பாத்திமாநாயகி எனும் நாமத்துடனே உலகசுற்றுப்பிரயாணம் பண்ணிக்கொண்டுவரும் யாத்திரைக்கன்னிகை போர்த்துக்காலிலே 33 வருடங்களின் முன் அத்தேசமக்களுக்கு அளித்ததூதை — உலகமுழுவதற்கும் அறிவிக்கத் தேவதாயார் ஆசித்தது தூதைச் சிலவாரங்களுள் எங்களையும்தரிசித்து அறிவிக்கவிருக்கின்றார்.

1917-ம் ஆண்டு முதலாவது உலகயுத்த முடிவிலே வைகாசிமாதம் 13-ந்திகதியன்று பாத்திமாவில் மூன்று இடைப்பிள்ளைகளுக்கு அவர் காட்சி அளித்துச் சொன்னதாவது: "பரித்தியாகக் கிரிகைகள் செய்வதுமன்றித் தேவனுக்கு அவமானமாகக் கட்டிக்கொள்ளப்படுகிற அநேகநேக துரோகங்களுக்கு நிந்தைப்பரிகாரமும் செய்யுங் கருத்துடன் அவர் உங்களுக்கு அனுப்பத்திருவுளமான சகல வேதனைவாதைகளையும் சந்தோஷமாய்ச் சகித்துக்கொண்டு, அதனால் பாவிகள்மனந்திரும்பும்படியும் எனது மாசற்றஇருதயத்துக்குமாறாகச் சொல்லப்படுகின்ற தேவதூஷணங்களுக்கும், செயயப்படுகிற நிந்தைஅவமானங்களுக்கும் பரிகாரஞ்செய்யும்படியும் உங்களை அர்ப்பணம் செய்ய விரும்புவீர்களா? நீங்கள் அதிகம்அதிகமாய்ப் பாடுபட வேண்டிவரும். ஆனால், தேவனின்வரப்பிரசாதம் உங்களுக்கு உதவிசெய்யும். உங்களுக்குத் தேவையான பெலனைத்தரும்"

1917-ம்ஆண்டு ஆனிமாதம் 13-ந்திகதி லூசியா தேவதாயாரைநோக்கி: உம்முடன் என்னை மோட்சத்துக்குஅழைத்துச்செல்லும்என்றுகேட்டாள். அதற்குத் தேவதாயார் யாசிந்தாவையும், பிரான்சீஸ்குவையும் கூட்டிக்கொண்டுபோகச் சீக்கிரம்வருவேன்; ஆனால்நீயோ பூமியிலே இன்னும் சிலகாலம் சீவிக்கவேண்டும்; உன்மூலமாக நான் அறியப்படவும், சிநேகிக்கப்படவும் வேண்டுமென்பதுயேசுவின் விருப்பம்; என்னுடைய மாசற்ற இருதயபத்தியை உலகமடங்கலும் பரவச்செய்வதே அவரது விருப்பம்; உன்னை நான் ஒருபோதும்கைவிடேன் எனப்பகர்ந்தார். இந்தக்காட்சி அளித்த வேளையிற்தான் ஐந்து முதற்சனிக்கிழமைப்பத்தியை அனுசரிக்கும்விதமும் தேவதாயாரால் அறிவிக்கப்பட்டது.

1917-ம் ஆண்டு ஆடிமாதம் 13-ந்திகதி தேவதாயார் பிள்ளைகள்மூவருக்கும் வசனித்ததாவது: "நான் தேவனிடம்பரிந்துபேசி யுத்தம் முடிவுக்குவரும்படியாய் என்மகிமைக்காகத் தினமும் செபமாலைஓதுங்கள்; நான் ஒருவரே உங்களுக்கு உதவிசெய்யஇயலும்; ஒவ்வொருமாதமும் 13-ந்திகதி இவ்விடம்வந்துபோங்கள். ஐப்பசிமாதம் 13-ம் திகதி நான் யாரென்றும், நான் உங்களிடம்கேட்பது என்னவென்றும் உங்களுக்குத் தெரிவிப்பதுமல்லாமல், சகலரும்விசுவசிக்கும்படியாக மகாபுதுமை ஒன்றையும் செய்வேன்." இக்காட்சி அளித்தபொழுதுதான் இரண்டாவது உலகமகாயுத்தத்தைப்பற்றி முன்னேறவே அவர் தெரிவித்தார். முன்னறியாத வெளிச்சத்தினால் ஓர்இரவு துலங்கும்பொழுது உலகத்தின்கணக்கற்ற துரோகங்களின் நிமித்தம் சர்வேசுரன் அதற்குக்கொடுக்குந் தண்டனையாகிய படைபஞ்சமும், திருச்சபைக்கும், பரிசுத்த பிதாவுக்கும்விரோதமான வேதகலாபனைகளும் அடுத்துவரும் காலம் அதுவேஎன்பதைக் காட்டும் அடையாளம் அதுவேயாம். இந்த நிர்ப்பாக்கியங்கள் நிகழாதுதடுக்கும்படி உலகமுழுவதையும் என்மாசற்ற இருதயத்துக்கு அர்ப்பணம் செய்வதுமல்லாமல், அதற்கு விரோதமாகச் செய்யப்பட்டுவரும் துரோகங்களுக்கு நிந்தைப்பரிகாரமாக மாதத்தின் முதல்சனிக்கிழமைகளில் சற்பிரசாதம் பெற்றுவரவேண்டும். என்விண்ணப்பத்துக்கு இணங்கி நடப்பீர்களானால் ருஷியா மனந்திரும்பும். அன்றேல் உலகமுழுவதிலும் தப்பறைகள்பரந்து சண்டைகளும், திருச்சபைக்குவிரோதமானகலாபனைகளும் உண்டாகக்காரணமாயிருக்கும். பரிசுத்தபிதா அதிகதுயரத்தை அனுபவிப்பார். அநேகசாதிசனங்கள் அழிக்கப்படும். ஆயினும்இறுதியில் நம்முடையமாசில்லாதஇருதயம் வெற்றிகொள்ளும். பரிசுத்தபிதா ருஷியாவை எனக்கு நேர்ந்துஒப்புக்கொடுப்பார். அது மனந்திரும்பும். மனுக்குலத்துக்குச் சமாதானகாலம் அருளப்படும்.

ஆவணிமாதம் 19-ந்திகதி பாத்திமாநாயகி பிள்ளைகளை ஏவிச் சொன்னதாவது: "செபியுங்கள், அதிகமாகச் செபியுங்கள், பாவிகளுக்காகத் தபஞ்செய்யுங்கள், அநேகஆத்துமாக்கள் நரகத்துக்குப்போகிறார்கள். ஏனெனில், அவர்களுக்காகச் செபிப்பதற்கும், தபஞ்செய்வதற்கும் ஒருவருமில்லை" என்பதுவே.

'அதிசௌந்தரியமுள்ளமாது நீர்யார்?" என்று ஐப்பசிமாசம் 13-ந் திகதி லூசியா வினவியபொழுது, "நாமே செபமாலைநாயகி" என்று அவர் விடைபகர்ந்தார். இந்தக்காட்சியின் பின்னரே சூரியனில் மகாஅற்புத மாற்றம்தோன்றப் பாத்திமாவில் புதுமைஒன்று நடந்தது. இத்தருணத்திற்தான் பரலோகநாயகி வியாகுலமாதாவின் சாயலாய் ஊதாநிறமான உடை அணிந்து தமதுகரத்திற் கீர் மேல்உத்தரியமொன்றைஏந்தியமேரையாய் லூசியாவுக்குக் காட்சி அளித்தார். பாத்திமாவிலே மூன்று இடைப்பிள்ளைகளுக்கும், அவர்கள்மூலமாய் உலகம்முழுவதற்கும் தேவதாயார் கொண்டுவந்த தூதில்அடங்கிய மூன்றுவிண்ணப்பங்கள்: செபம்பண்ணவேண்டும்; விசேஷமாய்ச் செபமாலை சொல்லவேண்டும்; தபஞ்செய்யவேண்டும்; நிந்தைப்பரிகாரஞ்செய்யவேண்டும்; தேவதாயாரின் மாசற்ற இருதயத்துக்கு உலகத்தை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

தேவகோபத்தைச் சாந்தியாக்கவும், நமது ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியமானவரப்பிரசாதங்களைப் பெற்றளிக்கவும் ஓர் சிறந்தசாதனமாக ஐம்பதுக்கு மேற்பட்ட பாப்பரசர்களாலும் அநேகசுத்தவாளராலும் ஓர் சுகிர்த பத்திமுயற்சியெனப் பாராட்டப்பட்டதான செபமாலைப்பத்திமுயற்சியைத் தேவதாயார் பிரசித்தஞ்செய்தார். ஆதலால் அன்பார்ந்த சகோதரர்களே! தினமுஞ் செபமாலை சொல்லிவர எங்களால்ஆனமட்டும் பிரயாசப்படுவோமாக. எங்கள்குடும்பத்திலுள்ள சகலர் மீதும் தேவஆசீர்வாதங்கள் இறங்கும்படியாக அந்திசந்திச் செபங்களை நாங்கள் தினமும் சொல்வதுபோலச் செபமாலையையும் தினமும் குடும்பத்தார் சகலருடனும் சொல்லிவருவோமாக. பாவிகளுக்காக மன்றாடுவோமாக! உலகத்தார் உத்தம கிறீஸ்தசீவியம் சீவிக்கும்படியாய்ப் பிரார்த்திப்போமாக.

இரண்டாவதாக, மனிதரின் பாவங்களுக்குப் பரிகாரஞ்செய்வதற்குத் தபம்அவசியம்வேண்டும். எங்களிலும் பிறரிலுமுள்ள தேவசாயலை அழிப்பது பாவமே. ஆதலால், எங்களையும் பிறரையும் சீர்ப்படுத்தப் பரிகாரம்அவசியமல்லவா? எங்களுக்கு நேருஞ் சகலதுன்பதுரிதங்களையும், அதாவது எங்கள் அந்தஸ்துச் சம்பந்தமாயோ அல்லது வேறுவிதமாகவோ எங்களுக்கு வரும்சகலசிலுவைகளையும் தேவசித்தத்துக்குப் பணிந்த மனதுடன் சந்தோஷமாய்ச் சகித்துக்கொளவோமாக. "நீங்கள தபஞ்செய்யாவிட்டால், கெட்டே போவீர்கள்" என்ற தேவவாக்கியம் எல்லாக்காலத்துக்கும் பொருத்தமானதே.

மூன்றாவதாக, பாத்திமாதூது தெரிவிப்பதாவது: மரியாயின் மாசில்லாத இருதயத்தின்மட்டில் பத்திவைத்து நடப்பதாம். மூன்றாந்தடவைகாட்சிகொடுக்கிறவேளைதேவதாயார்கூறியது: உலகத்தை எனது மாசற்றஇருதயத்துக்குக் காணிக்கையாக்கவேண்டும். ஒவ்வொருமாதத்தின் முதற்சனிக்கிழமையிலும் பரிகாரநன்மை பெறவேண்டும். என்விண்ணப்பங்களுக்கு நீங்கள்செவிசாய்த்தால், ருஷியா மனந்திரும்பும், சமாதானம் எங்கும்ஓங்கும்.

அன்பார்ந்த சகோதரரே, நாங்களும் தேவமாதாவின் மாசில்லாதஇருதயத்துக்கு எங்களை ஒப்புக்கொடுப்போமாக! ஒப்புக்கொடுத்து அவருடைய புண்ணியங்களைக் கண்டுபாவிப்போமாக! எங்களை அவருக்கு முற்றாக அர்ப்பணஞ்செய்தவர்கள்போல நடக்கப் பிரயாசப்படுவோமாக!

### பாத்திமாநாயகியின் தரிசனை

சிலவாரங்களுள் பாத்திமாநாயகி இங்குஎழுந்தருளித் தமது திருத்தரிசனை அளிப்பார். ஆனிமாதம் 2-ந்திகதிதொடக்கம் 13-ந் திகதிமட்டும் ஏற்கனவே குறிப்பிட்டபடி யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் முக்கியஇடங்களைத் தரிசித்துக்கொண்டு வருவார். அவர்கொண்டுவரவிருக்கும் ஆசீர்வாதங்களை ஏராளமாய் அடைந்துகொள்ளும்படியாய் பின்னாற் கூறுபவைகளை நிறைவேற்றும்படி உங்களை ஏவித்தூண்டுகிறோம்.

1. பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், இந்நாட்டிலேயோ பொதுவாக உலகத்திலேயோ திருசசபைக்குச் சேராதவர்கள் மனந்திரும்பும்படியாகவும் மன்றாடுவீர்களாக.

2. ஒரே மேய்ப்பனும் ஒரே மந்தையுமாய்ச் சகலசபைகளும் ஒன்றித்துவாழச் செபம்பண்ணுவீர்களாக.

### ஆயத்தப்படுத்தல்

பாத்திமாநாயகியின்வருகைக்கு முந்தியமூன்றுதினங்களில் அனுசரிக்கப்படவேண்டியவை எவை எனில்: எங்கள்ஊரவர்கள் கட்டிக்கொள்ளுகிற பாவதுரோகங்

களுக்குப் பரிகாரமாகத் திவ்வியபூசைகண்டு சற்பிரசாதம் பெறவேண்டும். குருமார்வசிக்கும்கோவில்களிலும், சற்பிரசாதம் எழுந்தேற்றஞ்செய்திருக்கும் சிற்றாலயங்களிலும் திருமணித்தியாலமும், சற்பிரசாத ஆசீர்வாதமும் நடைபெறவேண்டும். குடும்பமாய்ஒதியசெபமாலைகளால்ஆய ஞானப்பூச்செண்டைக் கட்டளைச்சுவாமியார்மூலமாய் தேவதாயாருக்குக் காணிக்கைவைப்பீர்களாக. விசுவாசிகளுடைய பாவங்கள்யாவையும் மன்னிக்கப் பாஸ்குகாலத் திற்போல ஆத்துமகுருக்களுக்கு விசேஷ ஞான அதிகாரம் அருளப்பட்டிருக்கிறது.

வண.குருமாரே! அருமையான பிரிய சகோதரர்களே! நீங்கள் மரியாயின் பக்திபற்றுதல்மிக்க ஊழியர்களாக உள்ளபடியே ஆகவேண்டுமென வேண்டிகிற்கும்,

கிறீஸ்துநாதரிலும், அமலோற்பவமரியாயிலும் உங்கள்பற்றுதலுள்ள

✠ ஜே. எ. கியோமார், O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

யாழ்ப்பாணத்தில் 1950-ம் ஆண்டு வைகாசிமாதம் 1-ந் திகதி விடுக்கப்பட்டது.

[இந்தநிருபம் கிடைத்ததற்கு அடுத்த ஞாயிறு நமது மேற்றிராசனத்தின் சகல கோயில்களிலும், சிற்றாலயங்களிலும் வாசிக்கப்படவேண்டும்.]

19  50

## கொழும்புத்துறை அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் கொழும்புத்துறைத்தாபனத்தில் அடுத்துநிகழும் வைகாசிமாதம் 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அதிபத்திச்சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்கு சமுகந்தரும்படி அர்ச். சூசையப்பர் பக்தர்களையும், கொழும்புத்துறை பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

வைகாசிமாதம் 6-ந் திகதி சனிக்கிழமைமாலை 7-30 மணிக்கு மாலை ஆராதனை.

வைகாசிமாதம் 7-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்குப் பாடற்பூசையும், மாலை 4-30 மணிக்கு மாலைஆராதனையும் அதனைத் தொடர்ந்து திருச்சுரூபசுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாதஆசீர்வாதமும் நடந்தேறும்.

தாபனத்தலைவர்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சோழகக்காற்று உரமாக வீசிக்கொண்டிருக்கிறது அதனால் வெயில் அகோரம் சாந்தியாகின்றது. சென்ற ஞாயிறுவாரம் இவ்விடம் ஓர்சிறுமழை பெய்ததாயினும் அத்தாலே யாது சுகமும் ஏற்படவில்லை.

### பாதுகாவலரின் திருநாள்

பரிசுத்த கொஞ்சேஞ்சித் தாயாரின் ஆசனக்கோவிலைச்சேர்ந்த நன்மரணயத்தசபையார் தங்கள் பரலோக பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாளைத் தங்கள்சபையின் ஞானவிசாரணைத் தலைவரான வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்களின் தூண்டுதலாலே திரிதின உற்சவங்களுடன் சென்ற 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பத்திச்சிறப்பாய்க் கொண்டாடினார்கள். திரிதின உற்சவங்களிலே சபைஅங்கத்தவர்களும், பிறரும் கோவிலில் திரளாகச் சமுகமாயிருந்து அத்திருமாதவரைப் பாவாலும், பூவாலும் வணங்கித்துதித்து அவர்பேரில் அரியபிரசங்கங்களைக் கேட்டுமகிழ்ந்து, சற்பிரசாதஆசீர்வாதம்பெற்றுவந்தார்கள். திருநாளன்று காலை மூப்புச்சுவாமியாராகிய அதிவண. ஜி.ஏ.குருசாமிசுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் ஆசனக்கோவிற் கட்டளைக்குரவரால் வேஸ்பர் பாடப்பெற்றதும், அர்ச். சூசையப்பரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்து சற்பிரசாதஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவாயிற்று.

### அபிமானியின்உண்ணுவிரதம்

மன்னூரிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள ஆட்காட்டிவெளி எனும் கிராமத்தைச்சேர்ந்தவரும், மதுபானதுவேஷியும், மதுவிலக்கு அபிமானியுமான திரு. ஏ. கிறிஸ்தோ புலவர் அவர்கள் தம்முடையபகுதியிலே களவில் கள்ளுவிற்பனைசெய்யும் கள்ளுக்கொட்டில்கள் மூடப்படாவிடின் இந்த வைகாசிமாதம் 1-ந்திகதி தொடக்கம உயிர்நீங்குமிறவரையில் உண்ணுவிரதம் அனுட்டிப்பதெனத் தீர்மானஞ்செய்யலாயினர். எல்லாமதுபானங்களையும் விலக்கிவிடுவதென்று ஆட்காட்டிவெளிக் கிராமஅபிவிர்த்திச்சங்கஅங்கத்தினர்கள் செய்துகொண்ட உடன்பாட்டின்விளைவாகவே மதுவிலக்கு இயக்கம் ஏற்படலாயிற்று. அதற்கிடையிலேஅக் கிராமவாசிகள் மன்னூர்உபஏசன்றரைக் கண்டு தங்கள்கிராமத்திலே களவாக விற்பனைசெய்யும் கள்ளுக்கொட்டில்களையெல்லாம் நிறுத்திவிடவேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசும்படியாகச் சென்றவியாழக்கிழமை 48 மாட்டுவண்டிகளில் அங்குபோகவிருந்தார்கள். நிற்க, மன்னூர் உபஏசன்றர்அவர்கள் அங்குள்ள எக்சைஸ் இன்ஸ்பெக்றருடன் ஆலோசனைசெய்து ஆட்காட்டிவெளியிலே களவாகக் கள்ளு விற்பனை நடைபெறும் கள்ளுக்கொட்டில்களையெல்லாம் மூடிவிடுவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் விளைவாகப் புலவர் தமதுஉண்ணுவிரதத்தை நிறுத்திவிட்டார். வண்டிமாடுகளின் ஊர்வலமும் நின்றுவிட்டது. தற்போது ஆட்காட்டிவெளிமுழுவதும்மதுபானமற்ற ஓர் கிராமமாகிவிட்டது.

### தங்கத்தின் விலைக்கட்டுப்பாடு

தங்கத்தின்விலையும், அதனைத் தேவைக்கேற்றவாறு உதவுவதும் விரைவிலே அரசினரால் கட்டுப்படுத்தப்படுமெனத் தெரியவருகிறது. சிலகாலத்துக்குமுன் 60 ரூபா வரையில் விலைப்பட்ட தங்கப்பவுண் இப்போது 90 ரூபாவாகிவிட்டது. அரசாங்க மத்தியவங்கியை அமைப்பதில் ஏற்பட்ட காலதாமதமே தங்கத்தின் விலையையும், அதனை உதவுவதையும் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்குக் காரணமாகும். மத்தியவங்கி அமைக்கப்பட்டு வேலை ஆரம்பமானதும் தங்கத்தை இறக்குமதிசெய்து உதவும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது தங்கப்பவுணின்விலை 50 ரூபாவுக்கு மேற்படமாட்டாதென நம்பப்படுகிறது. யுத்தத்துக்குமுன் ஒரு தங்கப்பவுண் விலை 25 ரூபா. பின்னர் அது படிப்படியாக ஏறித் தற்போது 90 ரூபாவாகிவிட்டது.

### றெயில்வேடிக்கெற் பரிசோதனை

றெயில்வேப் பிரயாணிகளின் பாஸ்களையும், டிக்கெற்றுகளையும் றெயில்வே அதிகாரிகள் இனிமேல் கடுமையாகப் பரிசோதனைசெய்யவிருக்கிறார்கள். இதுவிஷயமாய் றெயில்வே ஜெனறல் மனேஜர் றெயில்வேஅதிகாரிகளுக்குக் கண்டிப்பான ஓர்உத்தரவு விடுத்திருக்கின்றார். அதன்பேரில் பிரயாணி ஒருவர் சீசன்டிக்கெற் வைத்திருப்பவரெனத் தெரிந்திருந்தாலுஞ்சரி, அவர் றெயில்வே பாஸ் வைத்திருப்பவரெனத் தெரிந்திருந்தாலுஞ்சரி அவர் ஸ்ரேஷனுள் பிரவேசிக்கும்போதும், அதிலிருந்து வெளியேறும்போதும் அவரைச் சோதனைசெய்யவேண்டும். இவ்விஷயத்திலே தங்கள்கடமையைச் சரிவர நிறைவேற்றாதஅதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கைஎடுக்கப்படுமென றெயில்வே ஜெனறல்மனேஜர்அவர்களை எச்சரித்திருக்கின்றார்.

### பயங்கரயாத்திரை விபத்து

முன்னர் இராணுவத்தைச்சேர்ந்திருந்த றக்ஒன்று சென்றபுதன்கிழமை இரவு தங்காலையிலிருந்து மூன்றுமைல் தூரத்திலுள்ள கொடிகமுவா எனுமிடத்திலே ஓர்மரத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகவே, அதில்சென்றவர்களில் சியடோறிஸ் என்பவர் அந்த இடத்திற்தானே இறந்துபோக, வேறு மூன்று ஸ்திரீகள் தங்காலைஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிறிதுவேளையால் இறந்துபோயினர். ஏனையோருள் 8 ஸ்திரீகளும், 17 ஆடவர்களுமாக 25 பேர் கடூரகாயமடைந்து தங்காலைஆஸ்பத்திரியில் இருந்துவருகின்றனர். ஆடவர்களில் மூவர் சீவாபாயமானநிலைமையில்இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. டேவிட்எனும் சாரதி காயமின்றித் தப்பிக்கொண்டனனும். விசாரணை நிமித்தமாக இவன் காவலில்வைக்கப்பட்டிருக்கின்றான். இவர்கள் கிராமா எனுமிடத்திலிருந்து சிவனொளிபாதமலைக்கு யாத்திரைபோய்த் திரும்பும் வழியிலேஇந்தவிபத்துஏற்படலாயிற்று. றக் மரத்துடன் மோதியவேகத்தில் சுக்குச்சுக்காயிற்று. சமீபகாலத்தில் நிகழ்ந்துள்ள இப்படியான மூன்று றக் விபத்துகளில் நாலுபேர் இறக்க, 49 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். இருபஸ்விபத்துகளில் நாலுபேர் இறக்க, 88 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.

## பொதுவர்த்தமானம்

### மிகப்பெரிய செல்வவந்தர்

உலகத்திலேயே மிகப்பெரிய செல்வவந்தரெனக் கூறப்படும் ஐதிராபாத் நிஜாம் மன்னரிடம் இன்று 40 கோடி ரூபாபெறுமதியான ஆஸ்திகளேஇருக்கின்றன. சுமார் 35 கோடி ரூபா மதிப்புள்ள தங்கத்தையும், வெள்ளியையும், நகைகளையும், நவரத்தினங்களையும் நிஜாம்மன்னர் சேர்த்துவைத்திருந்ததாகஅப்போதுமதிப்பிடப்பட்ட அவரது பொக்ஷங்களில் முடிக்குரிய ஆபரணங்களும், குலதனங்களும் அடங்கியிருக்கின்றன. அவர் சமீபத்திலே தமது உறவினர்களாகிய 500 பேரின் நன்மைக்காக ஏராளமான பணத்தை ஒரு தர்ம ஸ்தாபனத்தில் முதலீடுசெய்தார். ஜமீந்தார்களை ஒழிப்பதில் வழிகாட்டுமுகமாக அவர் பெருந்தொகையான காணிகளையும் அரசாங்கத்துக்கு அன்பளிப்புச்செய்தார். ஒருகாலத்திலே இந்தியாவில் முதன்மையாகவிளங்கிய சுதேச சமஸ்தானத்தின் சர்வ அதிகாரமுள்ள மன்னராகவிருந்த 64 வயதுடைய நவாப் மீர் உஸ்மான் அலி எனப் பெயரிய நிஜாம்மன்னர் இப்பொழுது ஐதிராபாத்தின் சட்டபூர்வமான தலைவராகவிருக்கிறார். அவர் தமக்கெனத் தினமும் ஐந்துரூபாதான் செலவிடுகிறாரென்று சொல்லப்பட்டபோதிலும் அவருக்கு அரசாங்கம் வருடமொன்றுக்கு ஒரு கோடிரூபா அளிக்கிறது.

### புதிய வால்வெள்ளி

ஹலேஎன்பவர் கண்டுபிடித்த வால்வெள்ளியைப்போன்று நவமானபெரிய வால்வெள்ளி ஒன்று 1953-ம்ஆண்டு வானமண்டலத்தில் தோற்றுமென்று ஒறேஞ்ச் சுதந்திரநாட்டிலே பெத்லேகம்எனும்நகரில் சஞ்சரிக்கும் ஓர்இரத்தினவணிகரான திரு. சாள்ஸ் மொறிஸ் கூறுகின்றார். தாம் ஏலவே நான்கு தூமகேதுக்களை முன்னதாகச்சரிவரக் கண்டறிந்து தெரிவித்திருப்பதாக இவர் பாராட்டிக்கொள்ளுகின்றார். புதிய வால்வெள்ளி 1953-ம் ஆண்டு ஆனி அல்லது ஆடிமாதத்திலே உலகின் அதிகமான பகுதிகளில் வெற்றுக்கண்ணுக்குத் தோற்றுமென இவர் தெரிவிக்கின்றார். ஹலேயின் வால்வெள்ளி இதுவரை உலகில்தோற்றிய வால்வெள்ளிகளிலெல்லாம்மகாவிசேஷப்பட்டது. இது தான்செல்லும்பாதையைச் சுற்றிப்பிரயாணஞ்செய்துகொண்டு திரும்பவும்பூமியில்தோற்ற 76 வருடங்கள் செல்லும். 1910-ம் ஆண்டு இது கடைசிமுறையாகத் தோற்றியது.

### மோட்டர்ரதங்களின் கணக்கு

இரும்புத்திரைநாடுகள்சிலநீங்கலாக ஏனைய 147 நாடுகளிலே கார்கள், றக்குகள், பஸ்களாக 6 கோடியே 24 லட்சத்து 63 மூவாயிரத்து 794 மோட்டர்ரதங்கள் தற்போது பாவனையில் இருந்துவருவதாக 1950-ம் ஆண்டுக்கான உலகமோட்டர்ரதத் தொகைமதிப்புத் தெரிவிக்கின்றது. 1930-ம்ஆண்டுமுதல் இவற்றின் தொகை நூற்றுக்கு 79 விகிதம் அதிகரித்திருக்கின்றது. அமெரிக்கஐக்கிய தேசமே முதற்பெருந்தொகையாக 6 கோடியே 34 லட்சம் ரதங்களைக் கொண்டிருக்கிறது. அடுத்தபடியாக ருஷியா 30 லட்சம் ரதங்களையும், பிரித்தானி ஏறக்குறைய 30 லட்சம் ரதங்களையும், பிரான்ஸ் 23 லட்சம் ரதங்களையும், கனடா 22 லட்சம்ரதங்களையும், ஆஸ்திரேலிய 11 லட்சம்ரதங்களையும் கொண்டிருக்கின்றன. ஆசியாவில் சுமார் 79 லட்சம் ரதங்களே பாவனையில் இருந்துவருகின்றன. 1949-ம் ஆண்டிலே அதிகமானதேசங்கள் பெற்றோல் பாவனைக்கட்டுப்பாட்டை நீக்கியமையாலே மோட்டர்ரதங்களின்பாவனை அதிகரித்திருக்கிறது.


## காணி விற்பனவு

யாழ்ப்பாணம்—மானிப்பாய்றோட்டில் 4-ம்கட்டையடியிலுள்ள "கட்டைப் பனி" எனும் 10—11 பரப்புக்கொண்ட காணிவிற்பனைக்கிருக்கின்றது. கிட்டத்தட்டப் பரப்பு 1,000 ரூபா கேட்பவர்களுக்கே விற்கப்படும். விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்.

T. A. Karalakulasingam,
Govt. Training College,
Maharagama


## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதயத்தினிடமும், அதிஇரக்கமுள்ள திருமுகத்தினிடமும், நற்சகாயமாதாவிடமும், அர்ச். தெரேசம்மாளிடமும், சங். சிஸ். அல்போன்சாவிடமும் நான்கேட்டமன்றாட்டு கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்கள் நாமங்கள் என்றும்புகழப்படக்கடவதாக.

காரம்பன் P. M.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கேட்டவரம் கிடைக்கப்பெற்றதால் மருதமடுத்தாயாருக்கும், அர்ச். அந்தோனியாருக்கும் புகழ்ச்சியாக நேர்த்தியின் பிரகாரம் பிரசுரப்படுத்துகிறேன்.

Adampan Rev. Fr. J. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திமாகிரியில் வைகாசி 13-ந்திகதி

பாத்திமாமாதாவின் திருச்சுரூபமானது ஆனிமாதமுற்கூற்றில் எங்கள் மேற்றிராசனத்துக்கு எழுந்தருளுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆயின் வைகாசிமாதம் 13-ந்திகதி அவமுதல் முறை காட்சியளித்த தினமென்பதை நாம் மறத்தல்கூடாது. இத்திருநாளை நாம் மிகவும் ஆடம்பரவைபவத்துடன் கொண்டாடவேண்டும். பாத்திமாகிரியில் இதைக்கொண்டாடுவோமாக. அதன்மூலம் எம்மிடையேவரப்போகும் புதுமையான சுரூபத்தை வரவேற்க நல்ஆயத்தஞ்செய்வோம். பாத்திமாகிரியின் நேயர்கள் அத்தினத்தில் சந்தோஷத்துடன் சமுகமளிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். அவர்களின் பரோபகார உதவியினாலேயே இச்சிற்றாலயம் கட்டப்பட்டதுஎன்பதை அவர்கள் நினைவுகூர்வார்களாக. இப்போது அவர்கள் சமுகமளித்துத் தங்கள்செபங்களினால் அதைத்தாபரிப்பார்களாக.

வைகாசி 12-ந்தேதி சாயங்தரம் 6 மணிதொடக்கம் நடுச்சாமம்வரையும் திருமணித்தியால ஆராதனை நடைபெறும். அதன்பின் மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் திவ்வியபூசை நிறைவேறும். பூசையின்பின்பு தேவநற்கருணை எழுந்தேற்றஞ் செய்யப்பட்டுக் காலைவரையும் வைக்கப்படும். அன்பர்கள் யாவரும்சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

HENRI GESLAND, O. M. I.
பாத்திமாகிரி,
கட்டளைக்குரவர்.

---

கத்தோலிக்க பெற்றோரே! இதோ கைகண்டபலன்

இலாபத்தைக் கண்டும் இனித் தாமதம்வேண்டாம்

### கரையூர் விவாக இலாபநிதிச் சங்கம்

1950-ம்ஆண்டு தை, மாசி, பங்குனி மாதங்களின் இலாபஉபகரிப்பு.

| அங்கத்தவரின் பெயர் | இடம் | அங்கத்தனராய் இருந்த வருஷம் | கட்டிய தொகை | எடுத்த தொகை |
|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| தவிதுப்பிள்ளை மிக்கேல் | பருத்தித்துறை | 10 | 112-80 | 230-37 |
| மாட்டீன் சூசைமுத்து | வலித்தூண்டல் | 11 | 124-50 | 286-00 |
| பாவிலுப்பிள்ளை நத்தாலி | வலித்தூண்டல் | 10 | 104-70 | 226-00 |
| சவிரிமுத்து பறுணாந்து | மாரிசன்கூடல் | 6 | 67-60 | 125-90 |
| சவிரிமுத்து சவினம் | புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) | 6 | 63-00 | 104.00 |
| பிலிப்பு அன்னம்மா | பருத்தித்துறை | 7 | 71-40 | 150-00 |
| அதிரியான் அந்திரேயப்பு | அரிப்பு | 6 | 61-50 | 105-80 |
| கணபதி யக்காசு | அல்லைப்பிட்டி | 8 | 85-80 | 175-90 |
| அந்தோனி யோசேப்பு | யாழ்ப்பாணம் | 7 | 75-00 | 153-80 |
| அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பி. | ஆனைக்கோட்டை | 6 | 64-20 | 102-75 |
| விருசு சவிரிமுத்து | எழுவைதீவு | 7 | 69-50 | 135-00 |
| சவிரிமுத்து மதலேனம் | கொண்டடித்தெரு | 12 | 133-90 | 350-39 |
| தவிது வலோரியாம்பிள்ளை | பாஷையூர் | 9 | 92-10 | 210-20 |
| தவிது ஞானப்பிரகாசம் | இளவாலை | 9 | 96-60 | 200-00 |
| லோப்பு மோசேஸ் | ஊறணி | 7 | 70-60 | 140-00 |
| அருளானந்தம் அந்தோனிப்பி. | புதுமைமாதாகோவில் யாழ்ப்பாணம் | 7 | 75-90 | 150-19 |
| செபமாலை அன்னம்மா | புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) | 7 | 64-50 | 135-00 |
| வயித்தி அந்தோனி | இளவாலை | 8 | 81-40 | 160-00 |
| V. Joseph கனகசுந்தரம் | சுண்டிக்குளி | 8 | 89-90 | 175-00 |
| யோசை திரேசம்மா | குருநகர் | 12 | 133-20 | 325-47 |
| A. லூயிஸ் லம்பேட் | வங்கலை | 7 | 79-80 | 141-87 |
| நசரேத் அருளப்பு | வங்காலை | 6 | 65-30 | 105-40 |
| மனவல்பிள்ளை மிக்கேல் | அடப்பன் றோட் | 12 | 134-10 | 320-08 |
| பீற்றர் ஞானப்பிரகாசம் | 4-ம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் | 9 | 94-80 | 216-00 |
| செபஸ்தியாம்பி. சந்தியாப்பி. | பாஷையூர் | 8 | 82-50 | 163-00 |
| யேக்கப் சவிரிமுத்து | ஸ்ரேசன்றோட் | 10 | 113-00 | 225-00 |
| Mrs. மொனிக்காவஸ்தியாம்பி. | டேவிட்றோட் | 8 | 87-80 | 170-02 |
| சூசைப்பிள்ளை மரியம்மா | கோவிற்குடியிருப்பு (முல்லைத்தீவு) | 6 | 68-90 | 105-00 |
| வயித்தி முடியப்பு | மயிலிட்டி | 7 | 77-90 | 140-00 |

— இந்தியாவிலே சோதிபுரி மகாராசாவின் சகோதரியான இராசேந்திகுன்வர்பாய் இளவரசிக்கும், பரோடாவின் பட்டத்திளவரசரான யுவராசாவுக்கும் சென்ற 22-ந் திகதி விவாகம் நடந்தேறியது. அப்போது சோதிபுரி மகாராசா தமது சகோதரிக்குப் 15 லட்சம்ரூபாபெறுமதியான ஸ்ரீதனங்கள் வழங்கினர். 47 அரண்மனைத் தாதிமார், தங்கஅணிகளையுடைய ஓர் யானை, 17 குதிரைகள், 5 பெரியமோட்டர்கார்கள், வெள்ளியாற்செய்த புராதன ஸ்நானத்தொட்டி ஆதியனவும் ஸ்ரீதனங்களில் அடங்கும்.

— 1946-ம் ஆண்டுமுதல் சிங்கப்பூரின் தேசாதிபதியாய் இருந்துவருகிறவரான சேர் பிறுங்லின் சிம்சன் அவர்கள் சென்ற சனிக்கிழமை இரவு "பாக்கியமான உலகம்" என்ற மல்யுத்த ஸ்றேடியத்தைவிட்டு வெளிகொள்ளும்போது சனக்கூட்டத்திலிருந்த யாரோஒருவன் அவர்மேல் ஓர் கைக்குண்டை வீசினன். ஆனால் அது அவர்காலிற்பட்டு அப்பாற்போய் வெடித்தமையால் எவர்க்குமே காயம் ஏற்படவில்லை. எவ்வித சேதமும் ஏற்படவில்லை...

---

## வன்னிநாட்டு இடப்பெயர் வரலாறு

எந்த நாட்டுப்பெயரையும் இந்நாளில் ஆராய்ந்து காரணவரலாறு அறிந்துகொள்ளுதல் இயலாக்கருமம். இயலாமைக்குக்காரணம் பல உண்டு. பெயர்ச்சொற்கள் சிதைந்து மாறியிருக்கும், உச்சரிக்கும் சோம்பல்காரணமாக உருக்குலைந்திருக்கும், எழுத்துக்கள் சேர்ந்து மழுங்கியிருக்கும். இவற்றினால் உள்ள பெயர்க் காரணம்மாறி வேறொன்றாய் மாறுதலுங்கூடும். மேலும் ஊர்க்கதைகளும், அபிமான கரிசனைகளும் ஊர்ப்பெயர்களின் காரணத்தை மறைத்துவிட்டன. ஊரிற் கொண்ட அபிமானங்காரணமாக அதன்உயர்ச்சியை நிலைநாட்டப் பல கதைகளையும் சிருட்டித்துள்ளார்பலர்.

"யாழ்ப்பாணம்" என்ற இடப்பெயருக்குக் காரணம்அறிய "யாழ்பாடிக் கதையை"ச் சிருட்டித்துவிட்டனர். "அநுராதபுரி" என்பதற்குத் தொண்ணூற்றுக்குமேற்பட்ட அரசர் ஆண்ட இடம் என்கின்றனர். இராமர் சீதையை மீட்டுச்செல்லும்போது மன்னாரிலிருந்தமக்கள் சேலையைமன்னிப் பிடித்துக் கடலுக்குள்நடந்து சென்றார்களாகையால் அவ்விடத்திற்கு "மன்னார்" ஆயிற்றென்பர்.

ஆனால், வன்னிநாட்டுப்பெயர்கள் இவ்வகைமாற்றங்களை அடையவில்லை. நமக்கு ஏமாற்றமும் அளிப்பனவல்ல. ஏனெனில், வன்னிப்பகுதி அவ்வளவு புராதீனமானதல்ல. பூர்வீக குடிகளாகிய சிங்களவர் தெற்கேதுரத்தப்பட அங்கு அதுகாலத்திற் குடியேறிய மக்கள் தாங்கள்குடியேறிய இடங்களுக்குப் புதுப்புதுப்பெயர்கள்இட்டு வழங்கலாயினர்.

வன்னிப்பகுதியில் குளங்கள் அதிகம். குளங்களைச்சூழவர மக்கள் குடியேறினர். குளங்களின்றேற் குடிசனமுமில்லை. குளங்கள் அழிந்துபோய்க் கிடக்கும் இடங்களில் குடிகளுமில்லை. குடியேறிய இடங்களின் பெயரும் குளத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும். ஆகவே, வன்னிநாட்டுப்பெயர்கள் யாவும் "குளம்" என்பதன் பரியாயப் பெயர்களோடுசார்ந்து நடப்பதைக் காணடல்கூடும். "குளம்" என்ற சொல்லுக்குரிய பரியாயப் பெயர்களாவன :- மடு, கேணி, ஓடை, குழி, தாழ்வு என்பனவாம். "மோட்டை" என்ற சொல்லும் குளத்தைக் குறிக்கும். ஆனால் அகராதியில் இல்லை. ஐஞ்ஞூற்றுக்கதிகமான வன்னிநாட்டுப்பெயர்களில் முக்கால்வாசி குளத்தை இறுதியாகவுடையன. மடுப்பெயர்கள் 24, மோட்டைப்பெயர்கள் 7, கேணிப் பெயர்கள் 4, ஓடைப்பெயர்கள் 3.

குளத்துக்குரிய பரியாயநாமங்கள் யாவும் பொருளளவில் ஒற்றுமையுடையனவல்ல. ஆனால், வன்னிநாட்டில் இவ்வேற்றுமை கவனிக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் "கேணி" என்றால் பொதுவாகப் படியாற் கட்டப்பட்டதாயிருக்கும். "மடு" என்பது சிறுநீர்நிலை. வில்லு என்பது தான்தோன்றிய சிறுபள்ளம். இப்படியான வித்தியாசங்கள் கருதி வன்னிநாட்டில் பெயரிடப்படவில்லை. இனி, "குளம்" என்ற சொல்லைப் பிரித்துக்காட்டி வேறுபடுத்த அவ்வூர் மரப்பெயர் முன்வரும். ஏனெனில், மரங்களே ஒரு ஊரின் பிரத்தியட்சப்பொருள். அதுவுமன்றிக் கிருஷிகத்தையே நம்பிவாழும் மக்களின் வாழ்க்கை மரங்களுடனும் சம்பந்தப்பட்டிருக்கும். மரங்களுள் இங்கு பிரதானமானது "புளி." சுமார் 40 க்கு மேற்பட்ட இடங்கள் "புளி"யுடன் சம்பந்தப்பட்டுள்ளன. நீர்கொழும்புப் பகுதியில் மக்களின்பெயர் அதிகமாகப் "பர்ணாந்து" என்றிருப்பதுபோலவும், கரையோரச் சிங்களவருள் "சில்வா" இருப்பதுபோலவும், இங்கிலாந்து உவேல்சில் "ஜோன்ஸ்" இருப்பதுபோலவும் வன்னியில் "புளி" வழங்கும். புளிப்பெயருக்குமுன் மக்களின் பெயரும் பெரு, சிறுஎன்ற அடைமொழிகளுநம்வழங்கும்.

இடப்பெயருக்கு உதவியாயிருந்த மற்றைய மரங்களாவன : மருது, நொச்சி, நாவல், விளா, பூவரசு, ஆல், வேம்பு இவையாகும். முதிரைமரம் வன்னியில் அதிகமாயிருந்தும் ஒரேஒரு குளம் அப்பெயரையடுத்து வந்துள்ளது. பாலையுமப்படியே.

குளங்களும், ஊர்களும் அவற்றின் தன்மைக்கும் கட்டப்பட்டமாதிரிக்கும் நிலையத்திற்கும் தகப் பெயர்பெற்றுள்ளன.

அலைக்கல்லுப்போட்டகுளம்: அலைகள் மோதியடிக்கக் கல்லுப்போட்ட குளம்.

செடிக்கேணி: செடிநிறைந்தகேணி.

செழியாவில்லு: வளப்பமற்ற வில்லு.

கல்லுக்கொணடமடு: கல்லெடுத்த மடு.

குடிதாங்கின குளம் :

முறிகண்டி: அணைக்கட்டு முறிந்த இடம்.

இன்னும் வெகு விசித்திரமான முறையொன்று கையாளப்பட்டிருக்கிறதென்பதைக்காட்டுவாம். ஏதாவது ஒருசம்பவம் நடந்தஇடத்தை, அந்தச் சம்பவம் எவ்வளவு துச்சமாயிருப்பினும் அச்சம்பவத்தால் அவ்விடத்திற்குப் பெயரிட்டழைத்தனர் வன்னிநாட்டுமக்கள்.

அலியன் சாய்ந்தகுளம்: யானை விழுந்திறந்தகுளம்.

ஆனைபிடித்தகுளம்: கொம்பன்யானை பிடித்தஇடம்.

கரிபட்டமுறிப்பு: யானை இறந்த அணைக்கட்டு.

மணவாளன்பட்ட முறிப்பு: மணவாளன் என்றயானை இறந்த இடம்.

கிடாப்பிடித்தகுளம்: எருமைகடா பிடித்தகுளம்.

கிடாச்சுரி: கிடாமாடு அழுங்கின சேறு.

புலிபாஞ்சான்கல்லு: புலி பாய்ந்த கல்லு.

மயில் முட்டையிட்ட குளம் :

ஒட்டுசுட்டான் :

முறியாக்குளம்: அணைக்கட்டு அழியாதகுளம்.

இப்படியாக இடப்பெயர்கள்போய்க் கொண்டிருக்கும். இனி அங்கு வசிக்கும் மக்களின்பெயர் பெரும்பாலும் இவையாகும்.

ஆண்டி, அப்பக்குட்டி, அரியன், ஆறுமுகத்தான், சோழியன், சூரியன், கட்டையர், கறுவல், கதிரன், கைலாயர், நிற்சிங்கர், பாலன், போக்கர், பூதர் இவை ஆண்களின் பெயர்களாகும்.

பெண்களின் பெயர்களாவன: இராமி, காப்பாச்சி, குஞ்சி, பூவணி, ஊமைச்சி என்பன.

(தி. க.)

---

## கத்தோலிக்க ஐக்கிய சங்கம்

திரிகோணமலை, சின்னக்கடை, பரிசுத்தவியாகுலமாதாகோயில் விசாரணைப்பங்கைச்சேர்ந்த கத்தோலிக்க ஐக்கியசங்கம் சென்ற 24-ந்திகதி திங்கட்கிழமைமாலை 6-30 மணிக்குச் சங்கபரிபாலகர் வண. T. ஆறன்ட் சுவாமியவர்களின்சமுகத்தில் கூடியது. நியாயதுரந்தரரும், பட்டினசங்க அங்கத்தவருமான திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம்அவர்கள் சங்கத்தின் புதிய தலைவராகச் சபையாரால் தெரிவுசெய்யப்பெற்றனர். அதன்மேல் உலகம் எங்கணும் திருயாத்திரைசெய்து வரும் பரிசுத்தபாத்திமா மாதாவின் திருச்சுரூபத்தை வரவேற்பதற்கான ஒழுங்குமுறைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சங்கம்அதி உன்னதமுறையில் வரவேற்கத் தயாராய் இருக்கிறதென்பது ஒப்புக்கொள்ளப்பெற்றுக்கூட்டம் இனிதுமுடிந்தது.

—காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### அடைக்கலத்திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்திலே திருக்கோவில் கொண்டிருக்கும் அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள் இந்த வைகாசிமாதம் 7-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை வழமை போலப் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படும் அன்றுகாலை 6-30 மணிக்குத் திருநாட்பூசை நிறைவேறும். பிற்பகல் 4-30 மணிக்கு வேஸ்பர்பாடி முடிந்ததும் மாதவவளனின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் திருநாள் முடிவாகும். தாபன பழையமாணவர்களும், யாழ்ப்பாணப் பட்டணப்பகுதியிலுள்ள அர்ச். சூசையப்பரின் பக்தர்களும் முந்தியமுறைகளிற்போன்று இம்முறையும் அவர் திருநாளன்று பெருந்திரளாக அப்பதியிற் சமுகந்தந்து இலங்கையின் இரட்சாபிதாவாகிய அவரது தவருத அடைக்கலத்தையும், அனுக்கிரகத்தையும் இரந்துகொள்வார்களாக. மேலும் திருநாளன்று பிற்பகல் நிகழும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தின்போதே யாழ்ப்பாண மேற்றிராசனமுழுவதும், அதில் அடங்கிய மேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னிகாஸ்திரிமார், விசுவாசிகளாகிய சகலரும் அத்திருமாதவனின் தவருத அடைக்கலத்திலே வருடந்தோறும் நேர்ந்துஒப்படைக்கப்படுவது அக்காலமுதல் நடைபெற்று வரும் புராதனவழக்கமாகுமென்பதையும் மறவாதிருப்பார்களாக!

### பெருமிதவரவேற்பு ஆயத்தம்

நிகழும் வைகாசிமாதம் 22-ந்திகதி திங்கட்கிழமை இரத்மலானை விமான நிலையத்தில் வந்துசேரவிருக்கின்ற பாத்திமாநாயகியின் அற்புததிருச்சுரூபத்தை வரவேற்பதற்கெனக் கொழும்பிலே பெருமிதஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. திருச்சுரூபம் விமான நிலையத்திலிருந்து காரிலே தெகிவலைச் சந்திக்குக் கொண்டுபோகப்படும்வழியில் இருகோவில்களில் தங்கும். ஒவ்வோர் கோவிலிலும் விசேஷ செபங்கள் செய்து, செபமாலையில் ஒவ்வோர்காரணிக்கம் சொல்லப்படும். பின்னர் தெகிவலைச்சந்தியிலிருந்து அங்குள்ள பரிசுத்ததேவமாதாவின் கோவிலுக்குத் திருச்சுரூபம் கொண்டுபோகப்பெற்று அன்று இராமுழுவதும் அங்குதானே தங்கியிருக்கும். சந்தியிலிருந்து கோவில்வரையிலுள்ள வீதிநீளம் பிள்ளைகள் நறுமலர்கள் தூவிச்செல்வார்கள். கோவிலிலே அன்றிரவு அநேக திருமணித்தியாலங்கள் நடந்தேறும். 23-ந் திகதி அதிகாலை 1 மணிமுதல் திவ்விய பூசைகள் நிறைவேறும். பின்னர் அன்றுகாலை அங்கிருந்துவேறுகோவில்களுக்குச் சுரூபம்புறப்பட்டுச்செல்லும். கொழும்புநகரின் பாதுகாவலரான அர்ச். லவுறேஞ்சியாரின்பேரால் வெள்ளவத்தையில் இருந்துவருகின்ற கோவிலிலும் அது சிறிதுவேளை தங்கிப்போகச் செய்வதற்கான முயற்சிநடைபெறுகின்றது.

### மரதன்—கவிதைப் பரிசில்கள்

மரதன் அஞ்சலோட்டக்கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குச் சென்ற 27-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்குப் பிரதமமந்திரியாரின் காரியாலயத்திலே பிரமர் டி. எஸ். சேனநாயக அவர்களால் ரொக்கப்பரிசில்கள் வழங்கப்படலாயின. தமிழ்க்கவிதையில் முதலாவது பரிசில் தொகையாக 1,000 ரூபா பெற்றவர் வட்டுக்கோட்டையைச்சேர்ந்த முது தமிழ்ப்புலவர் எம். நல்லதம்பி அவர்கள். இந்தப்பரிசிற்தொகையை நன்கொடை அளித்தவர் பாதுகாப்பு—வெளிநாட்டு மந்திரியாரின் நிரந்தரகாரியதரிசியான திரு. ஆர். ஜி. சேனநாயக அவர்கள். தமிழ்க்கவிதையில் இரண்டாவது பரிசில் தொகையாக 500 ரூபா பெற்றவர் காவெட்டி, திருஇருதய தமிழ்ப்பாடசாலைத் தலைமையாசிரியர் பாலபண்டிதர் திரு. கே. ரி. ஞானப்பிரகாசம் அவர்கள். இந்தப்பரிசிற் தொகையை நன்கொடைஅளித்தவர் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியாகும் திரு. ஏ. எல். தம்பியையா அவர்கள். அத்தருணம் நிதிமந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் மரதன் அஞ்சலோட்டக் கவிதைப்போட்டி ஆரம்பிக்கப்பட்டவரலாற்றைச் சிறப்பாகஎடுத்துக்காட்டி நன்கொடை அளித்தவர்களுக்கு நன்றித்துதி சாற்றினொர். பிரதமர் பரிசில்களை வழங்குகையில் அவற்றைப்பெற்றவர்களைப் புகழ்ந்து பாராட்டினர். பரிசில்கள் பெற்றபுலவர்கள் அத்தருணம் தங்கள் கவிதைகளில் ஓர்சிறு பகுதியைப் படித்துக்காட்டினார்கள். அங்கு சமுகமளித்தவர்களுக்குச் சிற்றுண்டி உபசாரணை நடந்ததன்மேல் வெற்றிபெற்ற கவிஞர்களின் அன்பர்களும், அபிமானிகளுஞ்சேர்ந்து அவர்களுக்கும், ஊர்காவற்றுறைப் பிரதிநிதிக்கும் மலர்மாலைகள் சூட்டி, மோட்டார்தங்களில் ஏற்றிப்பவனியாகச்சென்று பிரதிமைப்படம் பிடித்துத் தங்கள் ஆனந்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

### புதியநிரந்தர காரியதரிசி

யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதியாய் இருந்து வருகிறவரான திரு. ஆர். ஆர். செல்வத்துரை அவர்கள் நீதிமந்திரிகாரியாலயத்தின் புதியநிரந்தர காரியதரிசியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்ருர். இவர் கொழும்புசென்றுநேற்றுப் புதன்கிழமை தமது புதியஉத்தியோக பதவியைக் கையேற்றிருக்கின்ருர். இவருக்குமுன் இப்பதவிவகுத்திருந்தவரான திரு. சென் கிளேயர் சுவான் அவர்கள் சுப்பிறீங்கோட்டு உபநீதியாசர்களில் ஒருவராக நியமனம் செய்யப்பெற்றுள்ளனர்.

### யாத்திரை லோறிவிபத்து

குரும்பிட்டியாவிலிருந்து அனுராசபுரத்துக்கு 33 யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற லொறிஒன்று சென்றஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் குருநாகற்தெருவிலே அனுராசபுரத்திலிருந்து இரண்டுமைல்தூரத்தில் பாதையைவிட்டுவிலகி ஓர்நெல்வயலினூடாக 30 யார் தூரம் சென்று அப்பாற்புரண்டு நொருங்கிப்போயிற்று. அதிலே சென்றவர்களில் 25 பேர் காயமடைந்து அனுராசபுர ஆஸ்பத்திரி கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள். இவர்களிலே மூவரின்நிலைமை மோசமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### யாழ்ப்பாணமும் தேங்காயும்

கொழும்பிற்போலப் பணஉதவி செய்து குறைந்தவிலையிலே சனங்களுக்குத் தேங்காய்கள் உதவுந்திட்டத்தை யாழ்ப்பாணம், கண்டி, வதுளை ஆதிய இடங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவருவதுபற்றி அரசினர் ஆலோசித்துவருவதாகத் தெரியவருகிறது. குறைந்தவிலையிலே தேங்காய்உதவுந்திட்டமானது வாழ்க்கைச்செலவைக் குறைக்கும்நோக்கமாகக் கொழும்பிலே சிலமாதங்களின்முன் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கொழும்பிலே தற்போது குறைந்தவிலையில் ஒருவருக்கு வாரம்ஒன்றுக்கு இரண்டு தேங்காய்வீதம் சங்கக்கடைகள்மூலமாக உதவப்படுகிறது.

### றிற்றேண் டிக்கெற்றுகள்

யுத்தத்துக்கு முந்தியகாலத்திலே சனங்களால் அவ்வளவாக விரும்பப்பட்டுவந்த றெயில்வே றிற்றேண் டிக்கெற்றுகள், அதாவது தினமும்போய்வரக் கொடுபட்டுவந்த டிக்கெற்றுகள் திரும்பவும் பிரயாணிகளுக்குக் கொடுபடவேண்டுமென றெயில்வே ஜெனறல் மனேஜரான திரு. எம். கனகசபை அவர்கள் அரசினருக்குச் சிபாரிசு பண்ணியிருக்கின்ருர். இந்தடிக்கெற்றுகள் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், காலிபோலும் பெரியஸ்ரேஷன்களிலிருந்து 10 மைல்முதல் 75 மைல் தூரம்வரையிலுள்ள எந்தஒரு ஸ்ரேஷனுக்கும் வழமையான ஒற்றைச்சலாரியிலும் அதிற்பாதியிலும் கொடுபடவேண்டுமென ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. வியாபாரிகளுக்கும், மாகாணப்பட்டினங்களுக்கு ஒரே நாளில்போய்த் திரும்பஆசிப்பவர்களுக்கும் உதவியாகவே இது செய்யப்படுகிறது.

### மற்றேர் கூட்டுறவுஆஸ்பத்திரி

இளவாலையைச் சேர்ந்தவரும், கிராமச்சங்க தலைவராக முன்னர்இருந்தவருமான திரு. தம்பு கனகரத்தினம் அவர்கள் தெல்லிப்பளையிலே, யாழ்ப்பாணம்—காங்கேசன்துறைவீதியில் எட்டாம்மைல் கட்டையிலுள்ளதும், முப்பதினுயிரம் ரூபாவுக்குமேல் மதிப்புள்ளதுமான இரண்டரைஏக்கர் காணியை ஓர் கூட்டுறவு ஆஸ்பத்திரியை ஸ்தாபிக்கும்நோக்கமாய் நன்கொடையாக உபகரித்திருக்கின்ருர் தெல்லிப்பளைக்கூட்டுறவுவைத்தியசாலைச்சங்க அங்கத்தவர்கள் சென்ற 24-ந்திகதி திங்கட்கிழமை கூடி இந்தநன்கொடையை முறைப்படி ஏற்றியிருக்கின்றூர்கள். இந்தஆஸ்பத்திரியை மேலும் விசாலமாக்குவதற்காக அந்தக்காணியின் பக்கமாகவுள்ள சுமார் நான்குஏக்கர்நிலத்தை உபயோகிப்பதற்குத் தாம் அனுமதிப்பதாகவும் இந்தநன்கொடையாளர் வாக்குப்பண்ணியிருக்கின்ருர். இந்தஆஸ்பத்திரியைக் கட்டிமுடிக்க ஐந்துலட்சம் ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. இது ஸ்தாபிக்குமிடத்து, வடமாகாணத்திலே இரண்டாவது கூட்டுறவுஆஸ்பத்திரி இதுவாகும். மூளாய்ஆஸ்பத்திரியே முதலாவதாகும்

### டக்றர் ஆர். எல். திருச்செல்வம்

அரசாங்க தொழிற்பகுதி வைத்திய அதிகாரியான டக்றர் ஆர். எல். திருச்செல்வம் அவர்கள் சமூகசேவைகளின் உபதலைவராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இவர் முந்த நாவலப்பிட்டி ஐக்றிங் சுகாதாரவைத்தியஅதிகாரியாயிருந்து படிப்படியாகப் பதவியிலுயர்ந்து சிலவருடங்களின்முன்ருெக்பெல்லர் வித்தியாவெகுமதிபெற்று அமெரிக்கஐக்கியதேசத்திலும், பிரித்தானிய இராச்சியத்திலும் விசேஷ சுகாதாரவைத்தியபயிற்சி பெற்றுத் திரும்பினர்.

### சீனிவிலை குறையுமா ?

சீனியின் உலகவிலை வருகிற ஆடிமாசத்திலே குறையும்போல் இருக்கிறது. அங்ஙனம் விலைகுறையுமாஞல் இலங்கையிலும் சீனியின்விலையைக் குறைப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்கும். தற்போது இலங்கையிலே 10,000 தொன் பழுப்புச்சீனியும், 2,000 தொன் வெள்ளைச்சீனியும் இருப்பிலுள்ளன. இவைகள் வருகிற ஆனிமாசஇறுதிவரையிலே இந்நாட்டின் தேவைக்குப் போதியதாகும் வருகிறஆவணிமாசத்திலே புதியகோதுமைவிளைவு அறுவடையாகும்போது கோதுமைமாவின் விலையும் குறையுமெனத் தெரியவருகிறது. மாவின் விலையை $28\frac{1}{2}$ சதத்திலிருந்து 25 சதமாகக் குறைத்துவிடுமாறு அரசினர் தற்போது ஆலோசனை செய்துவருகின்றனர்.

### புதிய அப்புக்காத்து

கொழும்பிலே பிரதம நீதியரசரினதும், சங். கிறேசியன் நீதியரசரினதும் சமுகத்திலே சென்றமாதம் 3-ந்திகதி திங்களன்று திரு. ஜோர்ஜ் ஏ. ஞானப்பிரகாசம் அவர்கள் ஓர்அப்புக்காத்துவாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளலாயினர். இவர் சம்பத்திரிசியார்கல்லூரிப் பழையமாணவர்களில் ஒருவர். யாழ்ப்பாணப்பட்டணத்தைச் சேர்ந்தவரும், தற்சமையம் தம்பதேனியாவிலே கல்பலுமாதோட்டத்தில் வசிப்பவருமான திரு. பி. ஏ. ஞானப்பிரகாசம் அவர்களின் புதல்வர்.

---

— தென்கிழக்கு ஆசியாவிலே கம்யூனிஸ்த ஆதிக்கம் இல்லாத வியற்னம், கம்போடியா, லாவோஸ் ஆதிய நாடுகளைத் தாய்லாந்துஎன அறியப்படும் சியதேசம் அங்கீகரிக்கவேண்டுமென்று அதன்பிரதமரான மாஷல் சாங்ராம் அவர்கள் முடிவுசெய்திருக்கின்ருர். இதன்மூலம ஆசியாவிலே கம்யூனிஸ்தர்கள் பரவுவதை எதிர்க்குமாறு மேல்நாடுகள் கைக்கொண்டிருக்கும் இராசதந்திரத்தை இவரும் கையாண்டிருக்கிருர்.

## பூங்குயில்

I

பூங்குயிலே! தீங்குரலோய்! நாடிவாவா—எங்கள்
புனிதஅன்னை புகழ்இனிதே பாடிவாவா
ஓங்குமலர்ச் சோலைசுற்றி ஓடிவாவா—எங்கள்
உலகதாயின் வரவைஎங்கும் ஓதிவாவா

II

மாங்குயிலே! தேங்கிசையோய்! நாடிவாவா—எங்கள்
மரியன்னையை மனங்குளிரப் பாடிவாவா
பூங்குவளைக் காவிருந்து ஓடிவாவா—எங்கள்
புவியரசி வரவைஎங்கும் கூறிவாவா

III

தேமலர்கள் பூமலர்கள் தேடிவாவா—எங்கள்
தேவஅன்னை பாதமலர் சூடிவாவா
பாமலர்கள் கொண்டுஇதோ ஓடிவாவா— எங்கள்
பாத்திமாவின் தாய்வரவைச் சாற்றிவாவா

IV

முரசெனவே சிறகுரண்டும் முழக்கிவாவா—எங்கள்
முதலவன்தாய் பெருமையினை விளக்கிவாவா
அரசர்முதற் சகலரையும் அழைத்துவாவா—எங்கள்
ஆண்டவளின் வரவையாண்டும் உரைத்துவாவா

V

இன்னிசையாய்ப் பூங்குயிலே கூவிவாவா—எங்கள்
இன்பஅன்னை பாதமலர் தூவிவாவா
பொன்னிலங்கா நாடறியப் போற்றிவாவா—எங்கள்
பூசிதபாத் திமதாயை ஏற்றிவாவா

VI

உன்குரலின் ஓசைதனைக் காட்டவாவா—எங்கள்
உன்னதஞ்சேர் தாய்பெயரை நாட்டவாவா—எங்கள்
பொன்குயிலே அன்பொடுசீ ராட்டவாவா—எங்கள்
புத்தமுதாம் அன்னையைப்பா ராட்டவாவா

"ஆனந்தா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தரும சபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யாழ்ப்பாணம்:— யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், அர்ச். செபமாலை மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், பரிசுத்த பாத்திமா மாதா இவர்களின் வேண்டுதலாலும் எனது மனைவிக்கு ஏற்பட்ட விஷசுரம் நீங்கினதற்காக என்முழுமனதுடன் நன்றித்துதி செலுத்துகிறேன்.

S. J. A. பெர்னாண்டோ

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கீது அனுப்பப்பட்ட காணிக்கைகள்

அக்கரபத்தன : எல். ஏ. எஸ். தோமஸ் 2-00— பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 4-00— மஸ்கேலியா: எம். நீக்கிலாப்பிள்ளை 2-00 — அக்கரபத்தன: எச். ஆர். சில்வானுஸ் 1-00— கல்இல்லா : ஏ. எல். சீமான் 2-00— கம்பளை : மிஸ் கிறிஸ்ரி 1-00— கொச்சிக்கடை : கே. எம். பெர்ணாண்டோபிள்ளை 5-00 — அச்சுவேலி : பி. எஸ். சின்னப்பு 4-00— கல்கமுவா : ம. மேரி -50— உடப்புசலாவை: டபிள்யூ. ஜே. குருஸ் 2-50— நமுக்கல : எஸ். வி. பீற்றர் 2-50— மஸ்கேலியா : எம். பஸ்ரியாம்பிள்ளை 6-00 — உடப்புசலாவை : எஸ். எம். யோசேப்பு : 10-00 — நெலடேனியா: கே. சுந்தரராசா 5-00— காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 2-00 — அப்புத்தளை: என். டி. சீமான்ட் 3-00— கஸ்லான்ட்: கே. பிரும்மல் 2-00, மெஸ் குப்பான் 1-00 — கல்கமுவா : பி. வி. பெர்ணாண்டோ 1-00 — கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 1-00 — பொகவன்ரலாவ : எஸ். சன்ரியாகோ 1-00— அணுகலை: பி. யுவக்கீம் 30-00— முந்தல்: மா. அந்தோனிப்பிள்ளை 2-50— கண்டி : ஓர் உபகாரி 2-00— பண்டாரவளை : எஸ். பி. மாசில்லாமணி 5-00 — முருங்கன் : பி. எஸ். கொன்ஸ்ரன்ரைன் 1-00 — கல்கமுவா : மா. சந்தியாப்பிள்ளை 1-00 — கொள்ளுப்பிட்டி : மிசெஸ் எஸ். பிரான்சீஸ்பிள்ளை 5-00— நாவற்காடு : வ. சவிரிப்பிள்ளை 1-00— வவுனியா : எஸ். எம். வேந்தர்கோன் 1-00 — நிவேடா : வை. ஐ. கோமஸ் 1-00 — மாருவில்: பிரங் அன்ரன் 10-50— நாத்தாண்டி : வி. டி பி. பெரேரா 2-00— சூராவத்தை : மு. இறப்பியேற்பிள்ளை 1-00, செ. சின்னம்மா 1-00, எஸ். எஸ். மரியதாஸ் 5-00 — புத்தளம்: மிசெஸ் டபிள்யூ. எம். பெர்ணாண்டோ 2-00 — மாத்தளை : மிசெஸ் பொலிங் 1-00 — டிக்கோயா : ரி. எவ். சீமான் 2-00 — கல்கமுவா : மா. சந்தியாப்பிள்ளை -50 — முருங்கன் : பி. ஜே. சிறில் 1-00— அம்பிற்றியா : எம். டானியல் 2-00 — மஸ்கேலியா : எம். எஸ். அன்ரனி 1-00—நீர்கொழும்பு: கே. எஸ். மனுவேல் 2-00 — கொக்கிளாய் : அ. அன்னம்மா 2-00 — வதுளை : எம். ஜே. எல். ஞானப்பிரகாசம் 2-50 — மூதூர் : கே. ஏ. ஆர். டி வாஸ் -50 — மடுக்கலை : கே. எஸ். டானியல் 3-00 — பசறை : பிலிப் அன்ரனி 1-00, வயிலற் லில்லி பிலிப்பு 1-00, முத்துலிங்கம் 1-00 — கல்கமுவா : ம. சி. அந்தோனிப்பிள்ளை -50— பண்டாரவளை : மிசெஸ் எஸ். வி. பீற்றர் 1-50 — மாம்புரி : ஏ. மரியாம்பிள்ளை 1-00— கல்கமுவா : தோ. ஜேட்றூட் 1-00— மாம்புரி : வெ. சவிரியாம்பிள்ளை 1-00 — றக்குவானை : டபிள்யூ. ஐ. பெரேரா 1-00—பண்டாரவளை: ஜே. எஸ். பீற்றர் 2-00— பீற்றப்பிற்றற: ஏ. பிலிப்பையா 8-00 — கொழும்பு : எஸ். எம். யோசெவ் 3-00— கல்கமுவா: ஆர். எம். செபஸ்ரியாம்பிள்ளை 1-00— வதுளை: எஸ். பேர்ணாட் பீற்றர் 1-00 — இல்லா: எஸ். எம். மரியாம்பிள்ளை 2-50 — பொகவன்ரலாவ : எஸ். சன்ரியாகோ 1-00— அக்கரபத்தன : எல். ஏ. எஸ். தோமஸ் 1-00— புத்தளம்: டி. ஜி. டேவிற் 2-50.

The Director,
St. Joseph's Conference.
Bishop's House.
JAFFNA.

சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை
யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம்மேற்கு வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் — ஊர்காவற்றுறை றேட்டிலுள்ள 8/5, 8/6, 8/7 இல. மதவுகளுக்குக் கொங்கிறீற் அணை கட்டுவதற்கு வடமாகாணம் ஏஜண்டரவர்கள் 1950-ம் ஆண்டு மேமாசம் 23-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வார்.

2. குறித்த விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 25/ கச்சேரியில்கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக ரெண்டர் 1950-ம் ஆண்டு மேமாசம் 20-ந் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்களை வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## காணி விற்பனவு

யாழ்ப்பாணம், நான்காம் குறுக்குத் தெரு 71-ம் இலக்க வீட்டில் பங்கீடு செய்யப்பட்ட அரைப்பாகம் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கள் வேண்டுவோர், பளை சுகாதாரஇலாகா இன்ஸ்பெக்றருக்கு அல்லது கீழ் சொல்லப்படும் விலாசத்துக்கு எழுதவும்.

Bastiampillai,
24, Schofield Place,
COLPETTY.

## வாழைத் தண்டு

இலங்கையிலும், இந்தியாவிலும் பலர் வாழைமரத்தை அதிகமாகப்பயிரிட்டு வியாபாரஞ்செய்துவருகின்றனர். வாழைமரம்தரும் வஸ்துக்கள்ஒன்றும் வீணாவதில்லை. வாழைப்பழம், பூ, பிஞ்சு, காய்இவைகளை மக்கள் புசிக்கின்றனர். வாழைமட்டையை உலர்த்தி நார்களாகவும் பொடிமட்டையாகவும் உபயோகிக்கின்றனர். தண்டை ஆகாரமாகப் புசிக்கின்றனர். வேர்க்கட்டையின் இரசத்தைப் பலவிதநோய்களுக்கு மருந்தாக உபயோகிக்கின்றனர். இந்நாட்டிலே பலர் வாழைத்தண்டை உபயோகிப்பதில்லை. தென்னாட்டிலே வாழைத்தண்டைச் சிறியதாகநறுக்கிப் பாசிப்பயறு, துவரம்பருப்புமுதலான வஸ்துக்களில்ஒன்றைக் கலந்து பாகஞ்செய்து புசிக்கின்றனர். வாழைத்தண்டைப் பில்லைகளாக அறுத்துப் போட்டுக் குழம்புசெய்துசாப்பிடுவது நல்லது. வாழைத்தண்டை வாரத்திற்கொருமுறை உட்கொண்டுவரவேண்டும். குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை உட்கொள்ளும் ஆகாராதிகளுடன்கலந்து குடலுக்குள்சென்ற சிறுகற்கள் மிருதுவாகிய குடல்ஓரங்களில் தங்கித் துன்பத்தைத் தரும். சீரணித்தஆகாரம் கல்லின்மேல்தாக்குமானால் ஒருபெரியவலிகாணும். இப்படிக்கஷ்டப்படும்ஒருவியாதிஸ்தனுக்கு வைத்தியர்கள் அல்லது டக்றர்மார் மலந்தள்ளக்கூடிய பேதிமருந்துகளையும் வேறுமருந்துகளையும் கொடுக்கின்றனர். மருந்தால் குணமில்லையெனில் மயக்கம்கொடுத்துக் கல்தங்கிய இடத்தைச் சத்திரசிகிச்சையின்மூலம் வெட்டி மேற்சொல்லியகல்லை அப்புறப்படுத்தவேண்டியிருக்கிறது. குடலின் சதையில் அழுந்திநிற்கும் கல், அல்லது மணல், உமி, மயிர் இவைகளைக் கரைக்கமுடியாத காரணத்தால் சத்திரசிகிச்சை செய்யவேண்டிவருகிறது. இத்தகையபெரும் நஷ்டத்தைத்தரும் வியாதி வாழைத்தண்டின்ரசம் அல்லது தண்டின் உபயோகத்தால் நீங்கிவிடுகின்றது. ஆகவே நமக்குத்தெரிந்தோ தெரியாமலோ உட்செல்லுங்கற்களைக் கரைப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வாழைக்தண்டை வாரம் ஒருமுறை உபயோகித்துவரவேண்டும். பக்கசூலையால் அடிக்கடி வருந்தும் நோயாளர்களும் வாரம்ஒருமுறை வாழைத்தண்டின்ரசம் ஒரு அவுன்ஸ், விளக்கெண்ணெய் ஒருஅவுன்ஸ் இரண்டும்கலந்து சாப்பிட்டுவர வலிநீங்கிவிடும். சிறுகுழந்தைகளுக்கு வயதிற்கும், சக்திக்கும் ஏற்றவாறு அளவைக் குறைத்துக்கொடுக்கலாம். வாழைத்தண்டு இரும்பைமுறிக்கும் குணம் உடையது. ஆகையால் அயக்காந்த செந்தூரம்உட்கொள்பவர்கள் வாழைத்தண்டை உபயோகிக்கக் கூடாது. வாழைத்தண்டின் உபயோகம் வயிற்றில்காணும் சிறுகற்களைக் கரைத்துச் சீரணசக்தியைக் கொடுப்பதுடன் நீர்ப்பையில்காணும் கல்லடைப்பையும்நீக்கிவிடும். வாழைக்கிழங்கின்ரசம் பெண்களுக்குஏற்படும் பெரும்பாடுஎன்ற நோயைப்போக்க உதவுகிறது. ஆகையால் பலவகையில் தேகத்திற்கு நன்மையைத்தரும் வாழைத்தண்டை உணவோடு கலந்துகொள்வது நல்லது.

## திருமணம்

மன்னார், மாஜிஆசிரியரும், அர்ச். தேவமாதாகோவில், அர்ச். செபஸ்தியார்கோவில் சக்கிறிஸ்தாமுமாகிய திரு. எஸ். கிறுசாந்துகுருஸ் அவர்களின் கனிஷ்டபுதல்வி செல்விமேரி மாத்தா குருஸுக்கும், திரிகோணமலை ஸ்ரேஷன்மாஸ்றர் திரு. ஏ. ச். பேர்ணண்டோ அவர்களுக்கும் நடைபெற்ற திருமணம் மன்னாரில் அதிபிரஸ்தாபமானது. இம்மதி 19-ந்திகதி புதவாரம் இத்திருமணத்தைச் சிறப்பாக்கக் கொழும்பு, திரிகோணமலை ஆதியாம் பல வேறிடங்களிலிருந்துபலவகைவாகனங்களில்பலரும்வந்து அழகுற்று விளங்கிய மணமகள் இல்லத்தில் ஒருங்குகூடினர். அங்கிருந்து நாதசுரவாத்திய வரிசைகளுடன் மணமக்கள் தேசோமயமாய்ச் சிறப்புற்றிருந்த ஆலயத்தை அடைந்தனர். சாதி, சமயபேதமின்றிக் கிறீஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள் ஆதியபலரும ஆலயத்தில் சமுகமாக வண. எஸ். பீற்றர்சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்குநிறைவேறியது. பின்னர்பாடற்பூசை நடைபெற்றுத் "தெதேயும்" எனும் தேவதோத்திரகீதம் பாடியதும், திருமணஊர்வலம் புறப்பட்டு மணமகள் இல்லத்தைஅடைந்ததும் யாவர்க்கும் சிற்றுண்டிகள் தாம்பூல உபசாரணைகள் அருளப்பட்டன. சமுகமானோரெல்லாம் புதியதம்பதிகளை ஆசீர்வதித்துத் தத்தம்இல்லம் ஏகினர். புதியமணமக்கள் அஷ்ட ஐஸ்வரியங்களும்பெற்றுப் பல்லாண்டுவாழ அமலன் ஆசிஅருள்வாராக.

—நிருபர்

## உமது உணவை மென்று அருந்துக

உமதுபற்கள் உமக்கு அழகையும், வசீகரத்தையும் மாத்திரம் தருவன அல்ல. ஆனால், உமது உணவை நன்றாய்மென்று அருந்தவும் உதவுகின்றன. இது நீர்உண்பதை நன்கு சீரணிக்கச்செய்வதில் இன்றியமையாத ஓர்காரியமாகும்.

துரதிஷ்டவசமாய் உமது இயற்கைப்பற்களை நீர் இழந்து போய்விட்டீரானால், இனி நீர் செய்யக்கூடிய சிறந்தகாரியம், செயற்கைப் பல்கட்டும் ஓர் பல்வைத்தியரை நாடிப்போகவேண்டியதுதான்.

நல்லஉறுதியும், நன்றாகநின்று பிடிக்கக்கூடியதுமாய்ச் செயற்கைப்பற்களுக்கு இணையானபிரபையுள்ள அதிகம்புதிய வஸ்தைக்கொண்டு செயற்கையான வரிசைப்பற்களை நாம் செய்துஉதவிவருகின்றோம. இவ்வாறுபற்களை அமைக்கும்முறையானது புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட அதிகம்புதிய முறையாகும்.

தயவுசெய்து ஓர்தரம்நம்மைச்சந்தித்து ஆலோசனை கேட்பீராக! இதற்கு நீர் எவ்வித உபகாரமும் செய்யவேண்டியதில்லை. நாம் செய்யும் ஒவ்வோர் பணிக்கும் உத்தரவாதம் அளிக்கின்றோம். எப்போதும் திருப்தியடைந்து செல்லும் ஆயிரக்கணக்கான வாடிக்கைகாரரே நமதுசிறந்த பிரசித்தகாரர்கள்.

பத்திருனஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்

## மதித்தற்கரிய கொடையின் நஷ்டம்

### கண்பார்வை குன்றுவதே

வயது போகப்போக, அதாவது ஏறக்குறைய 40 வயசில் அல்லது சிலவேளை அதற்குமுன்தானும் சாமானியசணகள் பார்வையில் குன்றும அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதுவரை அதிகம் நெகிழ்ந்துஉறளத்தக்கனவாயிருந்த கண்ணின் ஒளிவட்டங்கள் இப்போது கடினமும், விறைத்தனவும் ஆகின்றன. இது முற்றும் இயற்கையான மாற்றமே. இதிலே விளைவதென்ன? கண்ணின் தசைநார்கள் ஒளிவட்டங்களிலே சரியாகக்கருமம் ஆற்றத்தவறுகின்றன. அப்போது இந்த ஒளிவட்டங்கள் பல்வேறு தூரங்களுக்குப் பார்வையைச் செலுத்த இடங்கொடுக்க முடியாதனவாகும். அதனால் கண்களிலிருந்து அதிக தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஓர்சார்பும, அதிகம பிரபையான வெளிச்சம் வேண்டுமென்ற விருப்பும் உண்டாகின்றன. எழுத்துக்கள் ஒன்றுமற்றொன்றினுள் சொருகுகின்றன. பகலில் விசேஷமாய்ச் செயற்கை வெளிச்சத்தில் வாசித்தபின் கணகள் களைகொள்ளுகின்றன. பின்னர் தலையிடி உண்டாகிறது. அநேகமுறைகளில் பார்வைத்தூரமமுற்றும் நன்றாயிருக்கிறது. ஆனால் சமீபவேலைக்கு உதவாதிருக்கிறது.

கணபார்வையைப் பரிசோதிப்பதிலும், தகுதியான மூக்குக்கண்ணாடிகளைத் தெரிவுசெய்து கொள்வதிலும் நமக்குள்ள அனுபவத்தை உமக்கு முற்றாகக் கையளிக்கிறோம். இக்காலமாதிரியான புத்தப்புதிய கருவிகளெல்லாம் இதுவிஷயமாய் நம்மிடம்கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன.

நல்ல கணபார்வையுடையவர்கள் மூக்குக்கண்ணாடிகளை போடவேண்டியதில்லை. ஆனால் இவர்களின் நட்பும, ஆதாவும் ஒரு மூக்குக்கண்ணாடியை விற்பதிலும் எவ்வளவோ கூடியமதிப்புள்ளன. உமது கண்களில பழுதுகாணும் போதுதான் நமது வியாபாரதலத்துக்கு வரும்படி அழைக்கிறோம்.

பத்திருனஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 30 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 4 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org